بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly

BADAR Qadian

TAMIL

இதழ் 5

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

28 ஜமாதியுஸ்ஸானி 1437 ஹிஜ்ரி கமரி 7 ஏப்ரல் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து–லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும்,அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்–காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக. ஆமீன்

இவர் உண்மையாளர். இவர் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளார் என்று கனவில் அவர்களுக்கு கூறப்பட்டதனால் மட்டும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் என்னிடம் பைஅத் செய்துள்ளனர். அதாவது, அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டார்கள். கனவில் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களிடம், உலகம் அழியப் போகின்றது. இவரே இறைவனின் இறுதிக் கலீஃபாவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஆவார் என்று கூறினார்கள். சில பெரியவர்கள் நான் பிறப்பதற்கு அல்லது நான் பருவ வயதை அடைவதற்கு முன்னதாக எனது பெயரைக் கூறி நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன் என்ற செய்தியைக் கூறியுள்ளனர். உதாரணமாக நிஃமத்துல்லாஹ் வலி அவர்களும் லூதியானா மாவட்டத்திலுள்ள ஜமால்பூரைச் சார்ந்த மியான் குலாப் ஷா அவர்களும் இவ்வாறு முன்னறிவிப்பு செய்துள்ளனர்.

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இப்போது நான் وَاَمَّا بِنِعۡمَةِ رَبِّكَ فَحَدِّثۡ மேலும் உமது இறைவனது பேரருளை பறைசாற்றுவீராக! (93:12) என்ற வசனத்திற்கேற்ப நான் என்னைப் பற்றி கூறுகின்றேன். அதாவது, இறைவன் என்னை இந்த மூன்றாவது தகுதியில் நுழையச் செய்து அவன் எனக்கு தந்திருக்கும் அந்த அருளை எனது முயற்சியால் அல்லாமல் நான் தாயின் வயிற்றில் இருக்கும்போதே எனக்கு அந்த அருளை அவன் வழங்கியுள்ளான். எனக்கு ஆதரவாக அவன் எத்தகைய அடையாளங்களை வெளிப்படுத்தி-யுள்ளான் என்றால், இன்றைய நாளான 1906 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் தேதி வரை அவற்றை ஒவ்வொன்றாக நான் எண்ணத் தொடங்கினால் அவை மூன்று இலட்சத்தையும் விட அதிகமாக இருக்கும் என்பதை இறைவன் மீது ஆணையிட்டு என்னால் கூற முடியும். எவருக்காவது எனது இந்த சத்தியத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்தால் அவற்றிற்கான ஆதாரத்தை என்னால் தர முடியும். அவற்றில் சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால் இறைவன் ஒவ்வோர் இடத்திலும் தனது வாக்குறுதிக்கேற்ப என்னை எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாத்தான். சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால் ஒவ்வோர் இடத்திலும் அவன் தனது வாக்குறுதிக்கேற்ப எனது தேவைகளை நிறைவேற்றியுள்ளான். சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால் அவற்றில் அவன் நிச்சயமாக اِنِّیۡ مُهِيۡنٌ مَنۡ اَرَادَ اِهَانَتَكَ உம்மை இழிவுபடுத்த நாடுபவரை நான் இழிவுபடுத்துவேன் என்ற தனது வாக்குறுதிக்கேற்ப என் மீது தாக்குதல் நடத்துபவர்களை இழிவிற்கும் அவமானத்திற்கும் ஆளாக்கியுள்ளான். சில அடையாளங்கள் எப்படிப்பட்டது என்றால் என் மீது வழக்கு தொடுத்தவர்கள் மீது தனது முன்னறிவிப்பிற்கேற்ப எனக்கு அவன் வெற்றியை வழங்கினான். சில அடையாளங்கள் நான் வாதம் செய்த நாளிலிருந்து இதுவரை நான் வாழ்ந்து வருவது தொடர்பானதாகும். ஏனென்றால், உலகம் உருவான நாளிலிருந்து இவ்வளவு நீண்ட காலம் வாழ்கின்ற நற்பாக்கியம் எந்த ஒரு பொய்யருக்கும் கிடைக்கவில்லை. சில அடையாளங்கள் காலத்தின் நிலைமையைப் பார்த்து உருவாகின்றன. அதாவது, இந்தக் காலக்கட்டம் ஓர் இமாம் பிறக்க வேண்டும் என்ற தேவையை ஏற்றுக் கொள்கின்றது. சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால் எனது நண்பர்களுக்காக நான் செய்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும். சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால் தீங்கு விளைவிக்கின்ற எதிரிகளுக்கு எதிராக நான் செய்த தீய துஆவினால் ஏற்பட்ட தாக்கமாகும். சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால் எனது துஆவினால் சிலர் கொடிய நோயிலிருந்து குணம் பெற்றனர். அவர்கள் அந்நாட்களிலிருந்து குணமடைவர் என்று முதலிலேயே எனக்கு செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தது. சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால் எனக்காகவும் என்னை உண்மைப்படுத்துவதற்காகவும் பொதுவாக இறைவன் விண்ணிலும் மண்ணிலும் வெளிப்படுத்தியுள்ள பேரழிவுகளாகும். சில அடையாளங்கள் இப்படிப்பட்டவையாகும். அதாவது என்னை உண்மைப்படுத்துவதற்காக சான்றோர்களாக தனிச்சிறப்புமிக்க சில சில மக்களுக்கு கனவுகள் வந்திருக்கின்றன. அவர்கள் கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்தார்கள். உதாரணமாக, சிந்து மாகாணத்தைச் சார்ந்த பெரியவரான சாஹிபுல் ஆலம் அவர்களும் இந்தக் கனவைப் பார்த்துள்ளார்கள். இவர்களுக்கு ஏறக்குறைய ஒரு இலட்சம் சீடர்கள் உள்ளனர். அவற்றை சாச்டேவாலேவைச் சார்ந்த குலாம் ஃபரீது சாஹிப் அவர்களுக்கும் இதே போன்று கனவு வந்துள்ளது. இவர் உண்மையாளர். இவர் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளார் என்று கனவில் அவர்களுக்கு கூறப்பட்டதனால் மட்டும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் என்னிடம் பைஅத் செய்துள்ளனர். சிலர் இந்தக் காரணத்தினாலும் என்னிடம் பைஅத் செய்துள்ளனர். அதாவது, அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டார்கள். கனவில் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களிடம் உலகம் அழியப் போகின்றது. இவரே இறைவனின் இறுதிக் கலீஃபாவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஆவார் என்று கூறினார்கள். சில பெரியவர்கள் நான் பிறப்பதற்கு அல்லது நான் பருவ வயதை அடைவதற்கு முன்னதாக எனது பெயரைக் கூறி நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன் என்ற செய்தியைக் கூறியுள்ளனர். உதாரணமாக, நிஃமத்துல்லாஹ் வலி அவர்களும் லூதியானா மாவட்டத்தைச் சார்ந்த மியான் குலாப் ஷா அவர்களும் இவ்வாறு முன்னறிவிப்பு செய்துள்ளார். சில அடையாளங்கள் எப்படிப்பட்ட-தென்றால் அதன் விளைவு ஒவ்வொரு சமுதாயத்திற்கு எதிரிலும் ஒவ்வொரு நாடு வரையிலும் ஒவ்வொரு காலக்கட்டம் வரையிலும் விரிவானதாக ஆகியுள்ளது. அவை முபாஹலாக்களின் தொடராகும். ☆ இதன் பல முன்னுதாரணங்களையும் உலகம் பார்த்து விட்டது. இவ்வாறு இந்த முன்னுதாரணங்கள் அதிக எண்ணிக்கையில் நிகழ்ந்திருப்பதைக் கண்ட பிறகு முபாஹலாவின் நடைமுறையை நான் என் தரப்பிலிருந்து முடித்து விட்டேன். ஆனால், என்னை பொய்யரென்று கருதுகின்ற ஒவ்வொருவரும்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

☆ நீதியில் நிலைத்திருக்கின்ற ஒவ்வொரு மவ்லவியும் குலாம் தஸ்தகீர் குஸூரியின் நூலைப் பார்த்து விட்டு எவ்வாறு அவர் தானாகவே என்னிடம் முபாஹலா செய்தார்? என்பதையும் தனது நூலான ஃபெய்ஸே ரஹ்மானியில் அதை வெளியிட்டார் என்பதையும் புரிய முடியும். பிறகு இந்த முபாஹலாவினால் சில நாட்கள் மட்டும் கழிந்ததும் அவர் மரணித்து விட்டார். இவ்வாறே ஜம்முவைச் சார்ந்த சிராகுத்தீன் தன் தரப்பிலிருந்து முபாஹலா செய்தார். நம் இருவரில் யார் பொய்யராக இருக்கின்றாரோ அவரை இறைவன் அழித்து விட்டடும் என்று எழுதினார். இதற்குப் பிறகு சில மாதங்கள் கழிந்ததும் பிளேக் நோயினால் இவர் தனது இரு மகன்களுடனும் அழிந்து விட்டார்.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian.

# ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ள சில படிப்பினை பெறத்தக்க சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நீதியை நிலைநாட்ட மனிதன் நீதிமன்றத்திற்கு செல்வது ஆகுமானது தான். ஆனால் பரஸ்பரம் ஒருவர் மற்றவர்களுக்கிடையே நண்பர்கள் மூலமாக பேசி பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட முடியுமென்றால் மூன்றாவது நபர் மூலமாக இதற்கு தீர்வு காண முடிந்தால், எல்லாரும் ஒன்றாக அமர்ந்து பேசி இதற்கு தீர்வு காண முடிந்தால் பிறகு இவற்றை விட்டு விட்டு நீதிமன்றத்திற்கு செல்லக்கூடாது. பிறகு இவ்விஷயத்தில் பிடிவாதம் காட்டவும் கூடாது.

தனது பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாக இருக்கின்றது. அவர்களது எந்த கட்டளைக்கு எதிராகவும் நடக்கக்கூடாது. ஆனால் பல இளைஞர்களும் தமது பெற்றோர்களுக்கு சரியான முறையில் மதிப்பளிப்பதில்லை. அவர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை கருத்தில் கொள்வதில்லை.

திருக்குர்ஆனை நன்கு சிந்தித்து கவனமாக படிக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விளக்கவுரைகளை படிக்க வேண்டும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் விளக்கவுரைகளை எழுதியுள்ளார்கள். அதைப் படிக்க வேண்டும். அவ்வாறே சில வசனங்களுக்கு கலீஃபாக்கள் கூறியுள்ள விளக்கங்கள் இருக்கின்றன. அவற்றையும் பார்க்க வேண்டும். சுயமாக சிந்திக்க வேண்டும். திருக்குர்ஆனிலிருந்தே அறிவு மற்றும் இறைஞானத்தின் கருத்துக்களை தேடுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

அறிவுடன் செயல் அனுபவமும் அவசியமானதாகும். உலகில் இதற்கு பெரும் முக்கியத்துவம் இருக்கின்றது.

அஹ்மதியான பிறகு ஜமாஅத்தின் அமைப்புடனும் கிலாஃபத்துடனும் வலுவான தொடர்பு வைப்பதன் மூலமாகவே தனது ஈமானை அந்த அஹ்மதி பாதுகாத்துக் கொள்ள முடியும். முறையாக அவர் தொடர்பு வைக்க வேண்டும். இவ்வாறு தொடர்பு வைப்பதற்காக அவர்கள் எத்தகைய வழிமுறைகளை பயன்படுத்த வேண்டும் என்றால் அவர்கள் தூரத்தில் அமர்ந்திருக்கும் நிலையிலும் தொடர்பு நிலைத்திருக்க வேண்டும்.

இன்றைய நாட்களில் M.T.A -ம் alislam website -ம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிரசுரத்தை பிறருக்கு எட்ட வைப்பதற்கான வழியாக இருக்கின்றது. ஒவ்வொரு அஹ்மதியின் தர்பிய்யத்திற்கும் கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் அவரை இணைத்து வைப்பதற்குமுள்ள வழியாக அது இருக்கின்றது. எனவே அவற்றுடன் இணைந்திருக்க முயற்சி செய்வது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். உங்கள் நண்பர்களுக்கும் இவற்றைப் பற்றி அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.

தொடர்புகளை உருவாக்குவதற்கும் கூட எத்தகைய மக்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் அவர்களது மார்க்க நிலை நன்றாக இருக்க வேண்டும். தொழுகைகளை முறையாக நிறைவேற்றுபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். குறிப்பாக ரப்வா மற்றும் காதியானில் இருக்கின்ற அஹ்மதிகளுக்கு நான் இது பற்றி நினைவூட்ட விரும்புகின்றேன்.

ரப்வாவில் வசிப்பவர்கள் இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். எவர்கள் பலவீனமாக இருக்கின்றார்களோ அவர்கள் பலவீனமானவர்களிடமிருந்து தாக்கத்தை பெறுவதற்கு பகரமாக எவர்களுக்கு ஜமாஅத்துடன் வலுவான தொடர்பு இருக்கின்றதோ மேலும் எவர்கள் தொழுகைகளை முறையாக பேணக் கூடியவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மக்களின் தாக்கத்தை பெறக் கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

ஷேகுபூரா மாவட்டத்திலுள்ள கோட் அப்துல் மாலிகைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது அலி சாஹிபின் மகனான மதிப்பிற்குரிய கமருஸ்ஸிபா சாஹிப் அவர்கள் ஷஹீதாக்கி விட்டார்கள். ஷஹீது மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்கு ஜனாஸா காயிப் தொழுகை நிறைவேற்றப்பட்டது.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 4 மார்ச் 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு அமான் மாதம் 4 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ

وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

கடந்த சில நாட்களாக நான் எனது குத்பா பேருரைகளில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துக் கூறியுள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய படிப்பினை பெறத்தக்க கதைகள், சம்பவங்கள் ஆகியவற்றை கூறியிருந்தேன். இன்றும் நான் இதுபோன்ற கதைகளை, சம்பவங்களை தேர்ந்தெடுத்த போது இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் கூறப்பட்டு வருகின்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள இந்த பழைய கதைகள் தொடர்பான அறிவிப்புகள் இன்று வரை தொடர்ந்து நமக்கு தெரிய வருவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாகவே ஆகும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இவை ஜமாஅத்தின் நூல்களில் இடம் பெறாமல் இருந்திருந்தால் இவை எப்போதோ எங்கோ புதைக்கப்பட்டு இருந்திருக்கும். இந்த புதிய காலகட்டத்தில் இதை எவருமே அறிந்திருக்க மாட்டார்கள். இன்று இந்த விஷயங்கள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், நான் ஏற்கனவே கூறியது போன்று நான் இன்று பார்த்த அறிவிப்புகளை இப்போது உங்களுக்கு எடுத்துக் கூறுவேன். இவை கதைகள் மட்டுமல்ல. மாறாக, இவற்றில் சில உண்மையான சம்பவங்களும் இருக்கின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதன் மூலம் சில போதனைகளையும் செய்துள்ளார்கள். சில இடங்களில் அவர்கள் சில விஷயங்கள் பற்றி கவனமூட்டியுள்ளார்கள். வெளிப்படையாகப் பார்க்கும் போது அவை நகைச்சுவையாக தெரியும். ஆனால் அந்த நகைச்சுவைகளில் கூட சீர்திருத்தம் தொடர்பான அம்சத்தை அவர்கள் நமக்கு முன்னால் எடுத்து வைத்துள்ளார்கள். அது போன்ற ஒரு நகைச்சுவையை நான் இப்போது உங்களுக்கு எடுத்துக் கூறுகின்றேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு தோட்டக்காரியின் உதாரணத்தை எடுத்துக் கூறி வந்தார்கள். அந்த தோட்டக்காரிக்கு இரண்டு மகள்கள் இருந்தனர். அதில் ஒரு மகள் குயவர்களின் குடும்பத்தில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள். அடுத்த மகள் தோட்டக்காரர்களின் குடும்பத்தில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள். எப்போது மேகங்கள் வந்தாலும் அந்த தோட்டக்காரி பைத்தியம் பிடித்தவள் போன்று இங்கும் அங்கும் திரிந்து கொண்டிருந்தாள். மக்கள் என்ன நடந்தது என்று அவளிடம் கேட்ட போது இனி எனக்கு ஒரு மகள் இல்லை. ஏனென்றால் மழை பெய்து விட்டால் எந்த எனது மகள் குயவர் குடும்பத்தில் மணமுடித்து கொடுக்கப்பட்டிருக்கின்றாளோ அவள் இனி இருக்க மாட்டாள் என்று கூறினார். ஏனென்றால் மழை பெய்து விட்டால் அவர்களது வியாபாரம் முடிவிற்கு வந்து விடும். அவ்வாறே மழை பெய்யாவிட்டால் தோட்டக்காரர்களின்குடும்பமும் இருக்க முடியாது. ஏனென்றால் தோட்டத்தில் காய்கறிகள் முளைக்காது. எந்நிலையிலும் மழை பெய்து விட்டால் குயவர்களின் மட்பாண்டங்கள் அழிந்து விடும். மழை பெய்யாதிருந்தால் காய்கறி முளைக்காமல் இழப்பு ஏற்படும் என்று அவள் கூறினாள். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 3, பக்கம் 211)

வெளிப்படையாக பார்க்கும் போது இது சிறிய விஷயமாக இருக்கின்றது. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த உதாரணத்தை இந்த சம்பவம் தொடர்பாக எடுத்துக் கூறினார்கள். அதாவது காதியானில் இரு நபர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. நண்பர்கள் அவர்களுக்கு புரிய வைத்தனர். ஆனால் இருவருமே இல்லை நாங்கள் ஆங்கிலேயே நீதிமன்றத்தில் தான் செல்லப் போகிறோம். அங்கு தான் இதற்கான தீர்ப்பை பெறுவோம் என்று கூறினர். இவர்களில் ஒருவர் மற்றவர் மீது அரசாங்க நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் போது இவர்கள் இருவருமே அல்லது இவர்களின் பிரதிநிதிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் துஆ செய்யும்படி கூறுவதற்காக

வருவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். இவர்கள் இருவருமே எனது சீடர்கள் ஆவர். அவர்களோடு எனக்கு தொடர்பு இருக்கின்றது. எனவே, யாருக்காக நான் அவர் வெற்றி பெற வேண்டும் என்றோ அல்லது தோல்வி அடைய வேண்டும் என்றோ துஆ செய்ய முடியும். எனவே நான் இவர்களில் யார் உண்மையாளர்களோ அவர்கள் வெற்றி பெறுவதற்காகவே துஆ செய்கின்றேன்.

இன்றும் நிலை இப்படித்தான் இருக்கின்றது. அஹ்மதிகள் ஒருவர் மற்றவர் மீது கஸாவில் அல்லது நீதிமன்றங்களில் வழக்கு தொடரும் போது அத்துடன் துஆ செய்யும்படி எனக்கு கடிதமும் எழுதுகின்றனர். இத்தகைய துஆவிற்காக கூறுவது முற்றிலும் மழை பெய்வது அல்லது பெய்யாமல் இருப்பது போன்ற விவகாரமே ஆகும். இதனால் குயவர் குடும்பத்தில் மணமுடித்து கொடுக்கப்பட்டுள்ள மகளுக்கு இழப்பு ஏற்படும். அல்லது தோட்டக்காரர் குடும்பத்தில் மணமுடித்து கொடுக்கப்பட்டுள்ள மகளுக்கு இழப்பு ஏற்படும். இருவரில் எவருக்கேனும் இழப்பு ஏற்படத்தான் போகிறது. இங்கு இதையும் நான் தெளிவாக கூறி விடுகின்றேன். இந்த உதாரணத்தின் மூலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஒருவர் மற்றவர் மீது வழக்கு தொடுத்திருக்கும் போது இன்றும் அவ்வாறு நடைபெறுகின்றது என்றால் அதில் எந்த குற்றமும் இல்லை என்று எவரும் கருதி விட வேண்டாம். மேலும் இது ஆகுமானது தான் என்று கருத வேண்டாம். இது ஆகுமானது தான். நீதியை நிலைநாட்ட மனிதன் நீதிமன்றத்திற்கு செல்வது ஆகுமானது தான். ஆனால் பரஸ்பரம் ஒருவர் மற்றவர்களுக்கிடையே நண்பர்கள் மூலமாக பேசி பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட முடியுமென்றால் மூன்றாவது நபர் மூலமாக இதற்கு தீர்வு காண முடிந்தால், எல்லாரும் ஒன்றாக அமர்ந்து பேசி இதற்கு தீர்வு காண முடிந்தால் பிறகு இவற்றை விட்டு விட்டு நீதிமன்றத்திற்கு செல்லக்கூடாது.

பிறகு இவ்விஷயத்தில் பிடிவாதம் காட்டவும் கூடாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இந்த முன்மாதிரியை விரும்பவில்லை. எனவே பிடிவாதம் என்பது நல்ல விஷயமல்ல. இந்த பிடிவாதத்திலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும். பிறகு துஆவிற்காக விண்ணப்பித்து இமாமை துன்பத்தில் ஆழ்த்துவதிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும். ஏனென்றால் இரு தரப்பில் உள்ளவர்களும் அஹ்மதிகளாக இருக்கும் போது யாருக்காக நான் துஆ செய்வது ? யாருக்காக நான் துஆ செய்யாமல் இருக்க முடியும்? எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த அந்த துஆவையே நான் செய்கின்றேன். அதாவது எவருக்கு உண்மையிலேயே உரிமை கிடைக்க வேண்டுமோ அவருக்கு அல்லாஹ் அதை வழங்குவானாக என்று நான் துஆ செய்கின்றேன்.

பிறகு அல்லாஹ் ஒரு விஷயத்தின் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளான். அது பெற்றோர்களை நாம் கண்ணியப்படுத்த வேண்டும். அவர்களோடு மரியாதையோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதாகும். மார்க்க விவகாரங்கள் அல்லது இறைவனது கட்டளை தொடர்பான விஷயங்கள் ஆகியவற்றை தவிர மற்ற விஷயங்களில் அவர்கள் கூறுவதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவர்களுக்குரிய உரிமையை செலுத்த வேண்டும். ஆனால் மார்க்க விவகாரம் வரும் போது எவ்வித தயக்கமுமின்றி நீங்கள் அவர்களிடம் இவ்வாறு கூறலாம். நிச்சயமாக நான் உங்களுக்கு கண்ணியம் அளிக்கின்றேன். ஆனால் இது இறைவன் கூறியுள்ள விஷயமாக இருப்பதால் இதற்கு எதிரில் நீங்கள் கூறுகின்ற விஷயத்தை கேட்க முடியாத நிர்பந்தத்திற்கு நான் ஆளாகியுள்ளேன் என்று அவர்களிடம் கூற வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: தனது பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாக இருக்கின்றது. அவர்களது எந்த கட்டளைக்கு எதிராகவும் நடக்கக்கூடாது. ஆனால் பல இளைஞர்களும் தமது பெற்றோர்களுக்கு சரியான முறையில் மதிப்பளிப்பதில்லை. அவர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை கருத்தில் கொள்வதில்லை. இன்னும் சொல்வதென்றால், அவர்களின் சந்ததிகளில் எவருக்காவது நல்ல பதவி கிடைத்து விட்டால் அவர்கள் தனது ஏழை பெற்றோர்களை சந்திப்பதற்கு கூட வெட்கப்படுகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். ஒரு இந்து மிகவும் சிரமங்களை சகித்துக் கொண்டு தமது மகனை B.A மற்றும் M.A வரை படிக்க வைத்தார். அந்த மகன் முதுகலைப் பட்டம் பெற்ற பிறகு Deputy ஆக பணிபுரிவதற்கு வேறு இடத்திற்கு சென்று விட்டார். அந்த காலத்தில் Civil Service –ல் Deputy ஆக ஆவது ஒரு பெரிய கண்ணியமாக கருதப்பட்டு வந்தது. இந்த காலத்தில் அவ்வாறு எவரும் கருதுவதில்லை. அந்த மகனின் தந்தைக்கு ஒரு நாள் இவ்வாறு எண்ணம் வந்தது. எனது மகன் Deputy ஆகி விட்டான். எனவே நானும் அவனை சந்திக்க செல்ல வேண்டும் என்று அவர் நினைத்தார். மகனை சந்திப்பதற்காக அவன் இருந்த சபையில் அவர் சென்ற போது அவனுக்கு அருகில் வழக்கறிஞர்களும், பேரிஷ்டர் போன்றோரும் அமர்ந்திருந்தனர். தந்தையும் தனது அழுக்கடைந்த வேட்டியை அணிந்த நிலையில் ஒருபுறம் சென்று அமர்ந்தார். அனைவரும் பேசிக் கொண்டு இருந்தனர். அங்கிருந்த நபருக்கு இப்படியொரு நபர் வந்து அமர்ந்திருப்பது தீயதாக தோன்றியது. நமது சபையில் இவர் யார் அமர்ந்திருக்கின்றார் என்று அந்த நபர் கேட்டார். Deputy இவர் கூறியதைக் கேட்டு கலக்கம் அடைந்தார். தான் வெட்கப்பட வேண்டியதிலிருந்து தவிர்ந்திருப்பதற்காக இவர் எங்களுக்கு உணவு கொண்டு வந்து தருபவர் என்று கூறினார். தந்தை மகன் கூறிய இந்த விஷயத்தைக் கேட்டு மிகவும் கோபமடைந்தார். தனது போர்வையை நழுவ விடாமல் எழுந்து நின்று கேளுங்கள். நான் இவருக்கு உணவு கொண்டு வருபவன் அல்ல. மாறாக, இவரது தாயாருக்கு உணவளிப்பவன் ஆவேன் என்று கூறினார். அருகில் இருந்தவர்களுக்கு இவர் Deputy –யின் தந்தை என்பது தெரிய வந்த போது அவர்கள் அவரை சபித்தனர். முதலிலேயே கூறியிருந்தால் நாங்கள் சரியான முறையில் இவருக்கு கண்ணியம் அளித்திருப்போம்; மரியாதையுடன் இவரை அமர வைத்திருப்போம் என்று அவர்கள் கூறினர்.

உறவினர்கள் ஏழையாக இருந்தால் அந்த உறவினர்களை சந்திப்பதிலிருந்தும் மக்கள் விலகிச் செல்கின்ற இது போன்ற காட்சிகளை நாம் பார்க்கின்றோம். அது தந்தையாக இருந்தாலும் சரி அல்லது வேறு உறவினர்களாக இருந்தாலும் சரி. இதன் காரணமாக தங்களது உயர்வான அந்தஸ்தில் எந்த குறைவும் ஏற்பட்டு விடக்கூடாது என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆகவே, பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் கண்ணியம் அளிப்பதிலிருந்தும் மக்கள் தவிர்ந்து கொள்கின்றனர். தாய், தந்தையரின் பெயரை ஒளி பெற செய்வதற்கு பகரமாக அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துபவர்களாக இவர்கள் ஆகிவிடுகின்றனர். (த.ஃப்ஸீரே கபீர் தொகுதி 7, பக்கம் 593)

ஒருமுறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சில சொற்பொழிவாளர்கள் அல்லது ஆலிம்களின் சொற்பொழிவுகளை தற்காலிக இன்பத்தை பெறுவதற்காக மக்கள் தங்கள் பழக்கத்தின் காரணமாக கேட்கின்றனர் என்ற விஷயம் தொடர்பாக கூறிக் கொண்டு இருந்தார்கள். கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இது தொடர்பாக இவ்வாறு கூறினார்கள். இந்த சொற்பொழிவாளர் நன்றாக பேசுகின்றார். இவரது சொற்பொழிவை கேட்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மட்டும் சபைகளுக்கு வர வேண்டாம். மாறாக, இந்த சபையில் என்ன பேசப்படுகின்றது? அதிலிருந்து என்ன பயனை அடைய முடியும்? என்பதைப் பார்க்க வேண்டும். சில மக்கள் சொற்பொழிவாளர் கூறும் விஷயத்தின் ஆழத்தை புரிந்து கொள்வதில்லை. விஷயத்தின் ஆழம் வரை சென்று சொற்பொழிவை புரிந்து கொள்வதில்லை. அந்த சொற்பொழிவின் நோக்கத்தை அவர்கள் புரிவதேயில்லை. அந்த சமயத்தில் இன்பத்தை பெறுவதற்காக மட்டும் அங்கு அமர்கின்றார்கள். அவ்வாறே சில சொற்பொழிவாளர்களும் கூட தற்காலிகமாக உணர்வுப்பூர்வமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக மிகவும் காரசாரமாக பேசுகின்றனர். அல்லது அவ்வாறு பேசுவதற்கு முயற்சி செய்கின்றனர். பல்வேறு குரல்களில் பேசுகின்றனர். தமது சொற்பொழிவின் மூலம் செயற்கையான முறையில் உருக்கத்தையும் ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். இத்தகைய ஒரு சொற்பொழிவாளரைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சொற்பொழிவாளரைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவர் பேசுவதற்காக எழுந்து நின்றார். அவர் கூறிய கருத்து மிகவும் உருக்கம் வாய்ந்ததாக இருந்தது. ஒரு நபர் வந்து அங்கு நின்றார். அவர் விவசாயியாக இருந்தார். அவர் கையில் ஒரு கேடாரி இருந்தது. இது விவசாயிகளிடம் இருக்கின்ற ஒரு பொருளாகும். முக்கோன வடிவில் அது இருக்கும். அதன் கைப்பிடி நீளதாக இருக்கும். அது உமி, வைக்கோல் போன்றவற்றை எடுப்பதற்கு பயன்படுத்தப்படும். பழைய காலகட்டத்தில் இங்கு மேற்கத்திய நாடுகளிலும் கூட இது பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்போது புதிய தொழிற்நுட்பங்கள் வந்துள்ள. ஆனால் இதற்கு முன்னர் இதுதான் பயன்படுத்தப்பட்டு வந்தது. எவ்வாறிருப்பினும், இந்த மனிதர் கிராமத்திலிருந்து வந்தார். சொற்பொழிவை கேட்பதற்காக அங்கு நின்றார். எத்தனை மக்கள் அங்கு இருந்தனரோ அவர்கள் மீது இந்த சொற்பொழிவு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் அந்த விவசாயியோ சிறிது நேரம் கழிந்ததுமே அழ ஆரம்பித்து விட்டார். அப்போது சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்த அந்த போதகரின் உள்ளத்தில் பகட்டு உருவாகி விட்டது. எனது போதனையை கேட்டு இவர் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகி விட்டார் என்று அவர் கருதினார். அவர் மக்களைப் பார்த்து, பாருங்கள்! மனிதர்களின் உள்ளங்கள் பல வகைப்படும். நீங்களும் பல மணி நேரமாக எனது அறிவுரைகளை கேட்கின்றீர்கள். ஆனால் உங்கள் மீது எந்த தாக்கமும் ஏற்படவில்லை. ஆனால் அல்லாஹ்வின் இந்த அடியாரும் இருக்கின்றார். அவர் மீது எனது சொற்பொழிவின் தாக்கம் உடனடியாக ஏற்பட்டு விட்டது. சிறிது நேரத்திற்காக அவர் இங்கு வந்து நின்றார். இப்போது அழுது விட்டார் என்று கூறினார். பிறகு அந்த சொற்பொழிவாளர் எந்த அளவுக்கு தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை மக்களுக்கு காட்டுவதற்காக, சகோதரர்களே! நான் கூறிய எந்த விஷயத்தின் தாக்கத்தின் காரணமாக தாங்கள் அழுதீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி கூறிய பதிலை உண்மையில் விவசாயிகளால் தான் புரிந்து கொள்ள முடியும். பழைய மக்களால் தான் அதை சரியாக புரிந்து கொள்ள முடியும்.

அந்த விவசாயி, நேற்று இவ்வாறே எனது கன்றுக்குட்டி சப்தமிட்டுக் கொண்டே செத்துப் போனது. நான் உங்களது குரலை கேட்டதும் எனக்கு அந்த கன்றுக்குட்டி நினைவுக்கு வந்தது. அதனாலேயே நான் அழுதேன் என்று கூறினார். இதைக் கேட்டு அந்த சொற்பொழிவாளர் மிகவும் வெட்கத்திற்கு ஆளானார். (குத்பாத்தே மஹ்முது தொகுதி 6, பக்கம் 137) அந்த நபரின் உணர்வுகள் பொங்கி எழத்தான் செய்தன. ஆனால் சொற்பொழிவாளர் வலுவான குரலில் பேசியதாலும் சில சமயங்களில் உருக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்தவாறு தனது தொண்டையிலிருந்து வித்தியாசமான குரல்களை எழுப்பியதாலும் அவருக்கு

அதே போன்று தொண்டையிலிருந்து வித்தியாசமான குரல்களை எழுப்பியவாறு இறந்து போன அவரது கன்றுக்குட்டி நினைவுக்கு வந்து விட்டது. எனவே அப்பாவியான இந்த சொற்பொழிவாளர் எனது உருக்கம் நிறைந்த இந்த சொற்பொழிவைக் கேட்டு தான் இவர் அழுதார் என்று தனது சொற்பொழிவைப் பற்றி தவறாக புரிந்து கொண்டார். விவசாயியின் இந்த செயல் அவரது பகட்டையும், செயற்கையான தன்மையையும் உடனடியாக அகற்றி விட்டது.

நமக்கு எதிராக மவ்லவிகள் பேசுகின்றனர். எப்போதாவது நீங்கள் அவர்களது சொற்பொழிவைக் கேட்டால் முற்றிலும் இதே போன்ற குரல்கள் தான் அவர்களிடம் இருந்தும் வருகின்றன என்பதை தெரிந்து கொள்வீர்கள். இது அவர்களுடைய வேலையாகும். குறிப்பாக அஹ்மதிய்யத்திற்கு எதிராக பேசுகின்ற போது அவர்களுக்கு வருகின்ற வேகத்தை பார்க்கும் போது பாகிஸ்தானில் இருப்பவர்கள் ஆனாலும் சரி அல்லது பாகிஸ்தானிலிருந்து இந்த நாட்களில் இங்கு வந்திருப்பவர்களானாலும் சரி. எவர்கள் அவர்களது சொற்பொழிவை கேட்டிருந்தாலும் அவர்களது சொற்பொழிவுகள் எவ்வாறு இருந்தன என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியும். இது அல்லாஹ் நம்மீது செய்துள்ள பேருபகாரமாகும். நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நாம் ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால் இஸ்லாத்தின் பெயரால் இந்த பீர்கள் இட்டுக்கட்டி கூறியுள்ள தவறான கருத்துக்களை நாமும் ஏற்றுக் கொண்டிருப்போம். இறைவனிடம் மிகப்பெரும் அந்தஸ்தை தாங்கள் பெற்று விட்டதாக இந்த பீர்கள் கூறுகின்றனர். எங்களது துஆக்கள் மூலமாக நாங்கள் எங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றோம். எங்களுக்கு எந்த பொருளின் தேவையும் இல்லை. அல்லாஹ்வுடன் எங்களுக்கு நெருக்கமான தொடர்பு இருக்கின்றது. உலகத்தை முற்றிலும் விரும்பாமல் நாங்கள் இருக்கின்றோம் என்றெல்லாம் இவர்கள் கூறுகின்றனர். ஆனால் இதற்கெதிரில் செயல் எவ்வாறு இருக்கின்றது. இதைப்பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு நபர் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்.

அந்த நபர் தன்னைப் பற்றி, தான் மிகப்பெரிய அந்தஸ்தை அடைந்து விட்டதாகக் கருதி வந்தார். ஆனால் ஒரு முறை அவர் தனது சீடரிடம் சென்று எனது வரிப்பணத்தைக் கொடு! அதாவது எனக்கு காணிக்கை செலுத்தி விடு! என்று கூறினார். அது பஞ்சத்தின் நாட்களாக இருந்தது. எனவே அவர் என்னிடம் எதுவும் இல்லை. இந்த முறை என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறினார். பீர் அவர்கள் இறுதி வரை இவ்விஷயமாக அந்த நபருடன் சண்டையிட்டுக் கொண்டே இருந்தார். இறுதியில் அந்த நபர் அவரது ஒரு பொருளை விற்று பீருக்கு தொகையை செலுத்திய பிறகே பீர் அவரை செல்ல அனுமதித்தார்.

ஆகவே, இதுபோன்ற பலவீனங்களையும், அழுக்குகளையும் இந்த மக்களிடம் நாம் பார்க்கின்றோம். நாங்கள் மிகப்பெரிய அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றோம் என்று அவர்கள் பெரும் பெரும் வாதங்களை செய்கின்றனர். (திக்ரே இலாஹி அன்வாருல் உலூம் தொகுதி 3, பக்கம் 494-495) இது அந்த காலத்தில் நடைபெற்ற பழைய விஷயங்கள் அல்ல. இன்றும் கூட பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இத்தகைய பீர்கள் இருக்கின்றனர். திருக்குர்ஆனில் அறிவு மற்றும் இறைஞானம் அடங்கிய விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. திருக்குர்ஆன் எல்லா அறிவையும் சூழ்ந்து நிற்கின்றது. நமது குறைவான அறிவு மற்றும் நமது குறைவான சிந்தனை ஆகியவற்றின் காரணமாக நாம் அதன் ஆழத்தை பெரும்பாலும் சென்றடைவதில்லை என்பது வேறு விஷயமாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவில் இருக்கின்றது. ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். மருத்துவத்தின் எல்லா அடிப்படை விஷயங்களும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளன. உலகிலுள்ள நோய்களுக்குமான சிகிச்சை திருக்குர்ஆனில் இருக்கின்றது.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த விஷயம் தொடர்பாக திருக்குர்ஆனில் உள்ளவற்றை சிந்திப்பதற்கான சந்தர்ப்பமே எனக்கு கிடைக்காமல் இருந்திருக்கலாம். அல்லது எனது இறைஞானம் இதுவரை இந்த எல்லையை தொடாமல் இருந்திருக்கலாம். எந்நிலையிலும் எந்த அளவு எனக்கு அறிவு இருக்கின்றதோ அந்த அறிவையும் எனது முன்னோர்களின் அனுபவத்தையும் ஒன்று சேர்த்து நான் இந்த விஷயத்தை கூற முடியும். அதாவது திருக்குர்ஆனுக்கு வெளியே நமக்கு எந்த பொருளின் தேவையும் இருக்காது. (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 13, பக்கம் 503) எனவே, திருக்குர்ஆனை நன்கு சிந்தித்து கவனமாக படிக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விளக்கவுரைகளை படிக்க வேண்டும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் விளக்கவுரைகளை எழுதியுள்ளார்கள். அதைப் படிக்க வேண்டும். அவ்வாறே சில வசனங்களுக்கு கலீஃபாக்கள் கூறியுள்ள விளக்கங்கள் இருக்கின்றன. அவற்றையும் பார்க்க வேண்டும். சுயமாக சிந்திக்க வேண்டும். திருக்குர்ஆனிலிருந்தே அறிவு மற்றும் இறைஞானத்தின் கருத்துக்களை தேடுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். சில மக்கள் நாம் அறிவைப் பெற்று விட்டோம். இது அதிகமாக நம்மிடம் இருக்கின்றது. வேறு எந்த விஷயமும் நமக்கு தேவையில்லை. எவரது அனுபவமும் நமக்கு தேவையில் என்று எண்ணுகின்றனர். வேறு எவரிடமும் ஆலோசனை பெற வேண்டிய தேவை நமக்கில்லை என்றும் கருதுகின்றனர். ஆனால் இது அவசியமானதாகும். அறிவுடன் அனுபவத்தின் தேவை இருக்கின்றது என்பதை நினைவில் வைக்க வேண்டிய விஷயமாகும். ஒருவர் நூல்களை மட்டும் படித்து விட்டு மருத்துவராக விரும்பினால் இது மிகவும் கடினமான விஷயமாகும். நடக்காத ஒரு விஷயமும் ஆகும். மருத்துவ நூல்களை படிப்பதுடன் திறமைபெற்ற மருத்துவர்களுக்கு முன்னால் நோயாளிகளின் நோய் அடையாளங்கண்டு அவருக்கு அந்த மருத்துவர் சிகிச்சை செய்திருக்கவும் வேண்டும். இதனால் தான் மருத்துவர்களுக்கு கல்லூரிகளில் பாடம் கற்றுக் கொடுக்கும் போது அத்துடன் அவர்களுக்கு Practical வகுப்புகளும் நடக்கின்றன. திறமைபெற்ற மருத்துவர்களோடு அமர்ந்து அவர்கள் சிகிச்சையை கற்றுக் கொள்கின்றனர். இது இல்லையென்றால் அவர்களால் அனுபவத்தை பெற முடியாது. மனிதனால் எதையும் கற்றுக் கொள்ளவும் முடியாது.

எனவே, படித்து முடித்த பிறகு கூட அனுபவங்கள் மிகவும் அவசியமானதாகும். படித்துக் கொண்டிருக்கும் போது எங்களுக்கு அனுபவங்கள் கிடைத்தது என்று கூறுவது போதுமானதல்ல. எந்நிலையிலும் எந்தவொரு மருத்துவராக இருந்தாலும் அவர் தனது மருத்துவத்தை செயல்படுத்தும் போது தான் அவரது மருத்துவம் தொடர்பான அறிவு முழுமை அடையும். செயல் இல்லாமல் அறிவு பயனுள்ளதாக இருக்காது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த அறிவு மற்றும் செயல் தொடர்பாக இவ்வாறு கூறி வந்தார்கள். ஒரு மருத்துவர் இருந்தார். மிகப்பெரிய அறிஞராக அவர் இருந்தார். அவர் மருத்துவ நூல்களை நன்றாக படித்து அதிகமாக அறிவைப் பெற்றிருந்தார். அவர் அரசர் ரஞ்ஜீத் சிங்கின் புகழ் பற்றி கேள்விப்பட்டதும் தில்லியிலிருந்து அவரது அரசரவைக்கு வந்து சேர்ந்தார். அதன் மூலமாக ஒருவேளை அவரது மருத்துவ தொழிலில் முன்னேற்றத்தைப் பெறலாம் என்று நினைத்தார். ரஜ்ஜீத் சிங்கின் அமைச்சர் ஒரு முஸ்லிமாக இருந்தார். மருத்துவர் அவரை சந்தித்தார். மகாராஜாவை தான் சந்திப்பதற்காக பரிந்துரை செய்யும்படி அவரிடம் வேண்டினார். அதாவது மருத்துவர் அந்த முஸ்லிம் அமைச்சரை சந்தித்தார். நான் ராஜாவை சந்திப்பதற்கு நீங்கள் பரிந்துரை செய்யுங்கள் என்று கூறினார். அரசரின் பார்வை இந்த மருத்துவரின் பக்கம் திரும்பி விட்டால் நான் வீழ்ந்து விடுவேனே என்று அமைச்சர் கருதினார். அதே சமயத்தில் மருத்துவருக்காக சிபாரிசு செய்யாமல் இருப்பதும் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு எதிரான செயல் என்று அவர் கருதினார். அந்த மருத்துவரிடம் பேசியதிலிருந்து அவருக்கு செயல் ரீதியாக எந்த அனுபவமும் இல்லை என்பதை அமைச்சர் புரிந்து கொண்டார். எந்நிலையிலும் மருத்துவருக்கு அதிகமாக அறிவு இருக்கின்றது என்பதை அறிந்து மகாராஜா ரஜ்ஜீத் சிங் அவர்களிடம் அமைச்சர் அவருக்காக சிபாரிசு செய்தார்.

அரசே! இவர் மிகப்பெரிய அறிஞராவார். இவர் இந்த நூலைப் படித்துள்ளார் என்றெல்லாம் கூறி மருத்துவரின் அறிவு தொடர்பாக அமைச்சர் மிகவும் புகழ்ந்து கூறினார். அப்போது மகாராஜா அவர்கள், இவர் எப்போதாவது எவருக்காவது சிகிச்சை செய்துள்ளாரா? என்று கேட்டார். சிகிச்சை செய்த அனுபவம் இவருக்கு உண்டா? என்பதை அறிய அரசர் விரும்பினார். அதற்கு அமைச்சர், அரசரின் மூலமாக அனுபவமும் இவருக்கு கிடைத்து விடும் என்று கூறினார். உங்களை சோதித்துப் பார்ப்பதன் மூலம் இவருக்கு அனுபவம் கிடைத்து விடும் என்றார். ரஞ்ஜீத் சிங் மிகவும் அறிவுள்ள மனிதராக இருந்தார். செயல் இல்லாமல் அறிவு எதுவுமே இல்லை என்பதை அவர் புரிந்திருந்தார். உங்களது அனுபவத்தை சோதித்துப் பார்ப்பதற்கு இந்த ஏழை ரஜ்ஜீத் சிங் தான் கிடைத்தானா? என்று அரசர் கேட்டார். இந்த மருத்துவருக்கு ஏதாவது பரிசு வழங்கி விடை கொடுத்து அனுப்பி விடுவது சிறந்ததாகும் என்று அரசர் கூறினார். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 7, பக்கம் 18-19)

எனவே, அறிவுடன் செயல் அனுபவமும் அவசியமானதாகும். உலகில் இதற்கு பெரும் முக்கியத்துவம் இருக்கின்றது. எந்தவொரு களத்தில் அறிவை நாம் பெற்றாலும் செயல் அளவிலான அனுபவத்தை நாம் பெறாமல் இருந்தால் சில சந்தர்ப்பங்கள் இவ்வாறும் வரும். அதாவது சில இடங்களில் பணி செய்யும் போது மனிதனுக்கு இதற்குப் பிறகு என்ன வேண்டும் ? என்பது தெரியாது. இதன் காரணமாக அவனது கை, கால்கள் வீங்கி விடுகின்றன. அறிவு இருந்தும் கூட அவருக்கு முன்னால் இருக்கின்ற பிரச்சனை மற்றும் தடைகள் விலகாமல் இருக்கும். எனவே, மனிதன் அறிவைப் பெற்றுக் கொண்டு தன்னை ஏதாவதொரு களத்தில் திறமை பெற்றவன் என்று அவன் கருதிக் கொண்டால் பிறகு அப்படிப்பட்ட மனிதனுக்கு ரஞ்ஜீத் சிங் கூறிய அதே பதில் தான் கிடைக்கும். ஜமாஅத்தின் பொதுவான முன்னேற்றத்திற்கும் கூட இது மிகவும் அவசியமான விஷயமாகும். இதற்கு பெரும் முக்கியத்துவம் இருக்கின்றது. அதாவது இளைஞர்கள் புதிய கல்வியைப் பெறும் போது அது தொடர்பாக மேலும் அனுபவங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும். தனது அறிவை அனுபவமுள்ள மக்களோடு பிணைத்து அதனை ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகவும் பயன்படுத்த வேண்டும். இந்த புதிய தொழில் நுட்பத்தை நாம் பயன்படுத்த வேண்டும். அந்த விஷயத்தை நாம் பயன்படுத்த வேண்டும் என்று பல ஆலோசனைகளை மக்கள் கூறுகின்றனர். சில நேரங்களில் அறிவின் எல்லை வரை அவ்விஷயங்கள் சரியாக இருக்கின்றன. ஆனால் சில விஷயங்கள் எவ்வாறு இருக்கின்ற என்றால் அவற்றை அகற்ற வேண்டியது அவசியமானதாகும். அல்லது அதற்குப் பிறகு சில தடைகள் முன்னால் வருகின்றன. அவற்றைப் பற்றி சிந்திப்பது அவசியமானதாகும். அனுபவமுள்ள மக்களால் தான் அதைப்பற்றி கூற முடியும். அஹ்மதியான பிறகு ஜமாஅத்தின் அமைப்புடனும் கிலாஃபத்துடனும் வலுவான

தொடர்பு வைப்பதன் மூலமாகவே தனது ஈமானை அந்த அஹ்மதி பாதுகாத்துக் கொள்ள முடியும். முறையாக அவர் தொடர்பு வைக்க வேண்டும். இவ்வாறு தொடர்பு வைப்பதற்காக அவர்கள் எத்தகைய வழிமுறைகளை பயன்படுத்த வேண்டும் என்றால் அவர்கள் தூரத்தில் அமர்ந்திருக்கும் நிலையிலும் தொடர்பு நிலைத்திருக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை எடுத்துக் கூறியவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள். ஜமாஅத்திலுள்ள தனி நபர்களுக்கு ஜமாஅத் விவகாரங்களின் வேருடன் தொடர்பு ஏற்படாத வரை தனி நபர்கள் ஒருபோதும் முன்னேற்றத்தைப் பெற முடியாது. இன்னும் சொல்வதென்றால் அவர்கள் ஒருபோதும் உயிருடன் இருக்கவும் முடியாது. இந்த காலத்தில் இந்த தொடர்பை ஏற்படுத்துவதற்கான சிறந்த வழி பத்திரிகைகள் ஆகும். மனிதன் எந்த இடத்தில் அமர்ந்திருந்தாலும் அவருக்கு ஜமாஅத்தின் பத்திரிகைகள் கிடைத்துக் கொண்டிருந்தால் அவர் ஜமாஅத்திற்கு அருகில் அமர்ந்திருப்பது போன்ற நிலையே இருக்கும். இதற்கான உதாரணம் நான் இப்போது பேசுவது போன்றதாகும். இதனை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் பெண்களின் மாநாடு நடந்து கொண்டிருந்த சமயத்தில் மாநாட்டிற்காக சொற்பொழிவாற்றும் போது கூறினார்கள். அவர்கள் கூறினார்கள். பெண்கள் Loud Speeker மூலமாக சொற்பொழிவுகளை கேட்டுக் கொண்டு இருக்கின்றனர்.Loud Speeker மூலமாக அவர்கள் வரை குரல் சென்றடையாமல் இருந்தால் என்ன பேசப்படுகிறது என்பதைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது.

எனவே Loud Speeker பெண்களை எனது சொற்பொழிவுக்கு அருகில் கொண்டு வந்து விட்டது. இங்கும் கூட இப்போது Loud Speeker மூலமாகத் தான் பெண்கள் இருக்கும் ஹாலில் குரல் சென்று சேர்கின்றது. அவர்களும் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டு இருக்கின்றனர். ஆக, இதுவும் கூட ஒரு நெருக்கமாகும். இவ்வாறே பத்திரிகைகளும் தூரத்தில் இருப்பவர்களை சமுதாயத்துடன் தொடர்புள்ளவர்களாக ஆக்குகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல் ஹகம் மற்றும் பத்ர் ஆகிய பத்திரிகைகள் எனது இரு கைகளாகும் என்று கூறி இருந்தார்கள். சில நேரங்களில் இந்த பத்திரிகைகளில் இழப்பை ஏற்படுத்தக்கூடிய செய்திகள் வெளியிடப்பட்டு இருந்தாலும் இந்த பத்திரிகைகளின் மூலமாக கிடைத்த பயன்கள் அவற்றினால் ஏற்பட்டுள்ள இழப்பை விட அதிகமானதாகும். அதன் காரணமாகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த இரண்டு பத்திரிகைகளையும் நமது இரண்டு கைகளாக நாம் உணர்கின்றோம் என்று கூறி இருந்தார்கள். இரண்டு கைகள் என்பதன் பொருள் ஜமாஅத் ஆகும். அந்த ஜமாஅத் நம்மோடு இணைந்திருக்கின்றது என்பதாகும். பிறகு அந்த காலத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி இருந்தார்கள்.

அந்த காலத்தில் அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்தில் பத்திரிகைகளை படிப்பதன் பக்கம் ஜமாஅத் சகோதரர்களுக்கு அதிகமாக கவனம் இருந்து வந்தது. ஆனால் அந்த சமயத்தில் ஜமாஅத்தின் எண்ணிக்கை இப்போது இருக்கும் எண்ணிக்கையை விட பத்தில் ஒரு பங்கு அல்லது இருபதில் ஒரு பங்கு தான் இருக்கும். இப்போது 100 அல்லது 1000 களின் ஒரு பகுதியாக அது இருக்கின்றது. பத்ர் பத்திரிகை வாங்குபவர்களின் எண்ணிக்கை ஒரு காலத்தில் 1400 அல்லது 1500 ஆக தான் இருந்தது. அதற்குப் பிறகு இன்னும் அது அதிகமாகிக் கொண்டிருந்தது. இவ்வாறே அல் ஹகம் பத்திரிகையின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டிருந்தது. ஜமாஅத்திலுள்ள சகோதரர்கள் அந்த காலத்தில் அதிகமாக பத்திரிகைகளை வாங்கினர். இன்னும் சொல்வதென்றால், எவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாதோ அவர்களும் கூட சில நேரங்களில் பத்திரிகைகளை வாங்கினர். அவற்றை மற்றவர்களுக்கு படிக்கக் கொடுத்தனர். இதுவும் கூட தப்லீக்கிற்கான ஒரு வழியாகும் என்று அவர்கள் கருதி வந்தனர்.

இன்னும் சொல்வதென்றால், எழுதப் படிக்கத் தெரியாத குதிரை வண்டிக்காரரான ஒரு அஹ்மதி இருந்தார். அவர் அல் ஹகம் பத்திரிகையை கேட்டு வாங்கி வைத்துக் கொள்வார். குதிரை வண்டிகளில் ஆட்களை ஏற்றி செல்லும் போது அவர்களின் தோற்றத்தைப் பார்த்து இந்த மனிதர் நல்லவர் என்பதை புரிந்து கொண்டு அவருக்கு பத்திரிகையை கொடுத்து இந்த பத்திரிகை வந்துள்ளது. இதை எனக்கு படித்துக் காட்டுங்கள். நான் அதை கேட்க வேண்டும் என்று கூறுவார். இவ்வாறு சில நேரங்களில் குதிரை வண்டியில் வருபவர்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு சென்று சேரும் போது பத்திரிகையின் பெயரையும் முகவரியையும் குறிப்பு எடுத்துக் கொள்வர். இவ்வாறு அவர்கள் ஜமாஅத்தின் தொடர்பின் கீழ் வந்து விடுவர். பிறகு பைஅத்களும் நடந்தன. தனது பகுதியில் எழுத படிக்காத தெரியாதவராக இருந்தும் கூட குதிரை வண்டியை ஓட்டி வந்தும் கூட இவர் தான் எல்லாரையும் விட அதிகமாக மக்களை பைஅத் செய்ய வைத்துள்ளார் என்று அப்போது மக்கள் கூறி வந்தனர்.

இந்த காலத்தில் இன்னும் எளிதான நிலையை அல்லாஹ் உருவாக்கி தந்துள்ளான். தனது சுய தர்பிய்யத்திற்காகவும், கிலாஃபத்துடன் வலுவான தொடர்பை ஏற்படுத்துவதற்காகவும் ஒவ்வொரு அஹ்மதியும் M.T.A கேட்பது அவசியமானதாகும். இந்த பழக்கத்தை அவர் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மற்றவர்களுக்கு தப்லீக் செய்வதற்காக M.T.A –விலும் Website –லும் வரும் நிகழ்ச்சிகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். சில நேரங்களில் சந்தர்ப்பம் கிடைக்கும் போது நண்பர்களோடு அமர்ந்து அவற்றை பார்க்க வேண்டும். மேலும் நண்பர்களுக்கு அவற்றை பற்றி அறிமுகம் செய்து வைக்க வேண்டும். பலரிடமிருந்தும் எனக்கு இப்போதும் கடிதங்கள் வருகின்றன. நாங்கள் M.T.A –வில் குறைந்தபட்சம் குத்பாக்களை முறையாக கேட்க ஆரம்பித்ததிலிருந்து எங்களுக்கு ஜமாஅத்துடன் வலுவான தொடர்பு ஏற்பட்டு கொண்டிருக்கிறது. எங்களது ஈமானிலும் வலிமை உருவாகி இருக்கின்றது என்று அவர்கள் எழுதியுள்ளனர். எனவே இன்றைய நாட்களில் M.T.A –ம் alislam website –ம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிரசாரத்தை பிறருக்கு எட்ட வைப்பதற்கான வழியாக இருக்கின்றது. ஒவ்வொரு அஹ்மதியின் தர்பிய்யத்திற்கும் கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் அவரை இணைத்து வைப்பதற்குமுள்ள வழியாக அது இருக்கின்றது. எனவே அவற்றுடன் இணைந்திருக்க முயற்சி செய்வது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். உங்கள் நண்பர்களுக்கும் இவற்றைப் பற்றி அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.

சிலர் தங்களிடம் சீர்திருத்தம் ஏற்படுத்த வேண்டும். இஸ்லாமிய கட்டளைகளை பேணுபவர்களாக இருக்க வேண்டும் என்ற சிந்தனையை உடையவர்களாக இருக்கின்றனர். குறிப்பாக தொழுகைகள் தொடர்பாக முறையாக தொழக் கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும் என்ற விரும்பம் உடையவர்களாக அவர்கள் இருக்கின்றனர். ஆனால் அதற்குப் பிறகு சோம்பேறியாக இருக்கின்ற மக்களுடன் அவர்கள் நட்பு வைக்கின்றனர். அதன் காரணமாக சுயமே இம்மக்களும் கூட அவர்களுக்கு இருக்கும் நிலையிலும் சோம்பேறிகளாக ஆகி விடுகின்றனர். அவர்கள் அறியாமலேயே இந்த தாக்கம் அவர்கள் மீது ஏற்பட்டு விடுகின்றது. எனவே தொடர்புகளை உருவாக்குவதற்கும் கூட எத்தகைய மக்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் அவர்களது மார்க்க நிலை நன்றாக இருக்க வேண்டும். தொழுகைகளை முறையாக நிறைவேற்றுபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். குறிப்பாக ரப்வா மற்றும் காதியானில் இருக்கின்ற அஹ்மதிகளுக்கு நான் இது பற்றி நினைவூட்ட விரும்புகின்றேன். அங்கு சிறிய இடத்தில் அதிகமான எண்ணிக்கையில் அஹ்மதிகள் இருக்கின்றனர். கொஞ்சம் கொஞ்சம் தொலைவில் பள்ளிவாசல்கள் உள்ளன. அங்குள்ள பள்ளிவாசலை நீங்கள் நிரப்புங்கள். இவ்வாறே ஜமாஅத்தின் அமைப்பு தொடர்பாக தவறான எண்ணங்களை வைத்திருக்கின்ற பல மக்களும் உள்ளனர். அவர்களிடமிருந்து தவிர்ந்திருக்க நீங்கள் முயற்சி செய்யுங்கள். வெளியில் இருந்து எந்த மக்கள் அங்கு செல்கின்றார்களோ சில நேரங்களில் அவர்கள் இது தொடர்பாக எனக்கு எழுதுகின்றனர். புகார் கூறியும் எழுதுகின்றனர். அதாவது ரப்வாவிலும் கூட தொழுகைக்கான ஏற்பாட்டின் பக்கம் கவனம் செலுத்தும் தேவை இருக்கின்றது.

எனவே, ரப்வாவில் வசிப்பவர்கள் இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். எவர்கள் பலவீனமாக இருக்கின்றார்களோ அவர்கள் பலவீனமானவர்களிடமிருந்து தாக்கத்தை பெறுவதற்கு பகரமாக எவர்களுக்கு ஜமாஅத்துடன் வலுவான தொடர்பு இருக்கின்றதோ மேலும் எவர்கள் தொழுகைகளை முறையாக பேணக் கூடியவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மக்களின் தாக்கத்தை பெறக் கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். இந்த தாக்கம் எவ்வாறு ஏற்படுகின்றது? இந்த தாக்கம் என்மீது ஏற்பட்டுள்ளது என்பதை அறிவுள்ள ஒருவன் எவ்வாறு புரிந்து கொள்கின்றான் ? என்பதற்கு உதாரணம் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்.

அதாவது ஒருமுறை ஜாலி நூஸ் ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தார். ஒரு பைத்தியக்காரன் ஓடி வந்து அவரை கட்டிப் பிடித்துக் கொண்டான். ஜாலி நூஸ் அந்த பைத்தியத்காரனை விட்டு விலகிய போது எனது இரத்தத்தை வெளியேற்றி விடுங்கள் என்று அவர் கூறினார். இதைப் பார்த்த மக்கள் நீங்கள் ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள்? என்று கேட்டனர். அதற்கு அவர், இந்த பைத்தியக்காரன் என்னை வந்து கட்டி அணைத்ததன் காரணமாக என்னிடமும் பைத்தியத்தின் ஏதாவதொரு நாளம் இருக்கின்றது என்று எனக்கு தோன்றுகிறது. இவன் மற்றவர்களை விட்டு விட்டு என்னை வந்து கட்டி அணைத்ததால் எனக்குள்ளே பைத்தியத்தின் ஏதோவொரு நாளம் இருப்பது தெரிய வருகிறது. அத்துடன் அந்த பைத்தியக்காரனுக்கு தொடர்பு ஏற்பட்டு விட்டது. அதன் காரணமாகவே என் பக்கம் அவன் ஈர்க்கப்பட்டுள்ளான் என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: தொழாமல் இருக்கக்கூடிய மக்களை சார்ந்திருப்பதும் தொழுகைகளை பேணுவதில் சோம்பேறிபவர்களாக இருப்பவர்களுக்கு பின்னால் செல்வதும் இவர்களையும் சோம்பேறிகளோடு தொடர்புடையவர்களாக ஆக்கிவிடுகின்றது. எனவே பொதுவாக எல்லா இடங்களிலும் ஒவ்வொரு அஹ்மதியும் சோம்பேறிகளாக இருக்கும் மக்களோடு தொடர்பு வைப்பதற்கு பகரமாக சுறுசுறுப்பாக செயல்படுகின்ற மக்களுடனும் ஜமாஅத்திலுள்ள சுறுசுறுப்பாக செயல்படுகின்ற மக்களுடனும் தொடர்பு வைக்க வேண்டும். இந்த தொடர்பு நிலைபெற்று விட்டால் சுறுசுறுப்பாக செயல்படும் மக்களின் எண்ணிக்கை அதிகமாகி விடும். அவ்வாறு எண்ணிக்கை அதிகமாகி விட்டால் சோம்பேறிகளாக இருப்பவர்கள் கூட சுறுசுறுப்பானவர்களாக ஆகிவிடுவர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சபையில் ஒருமுறை ஒரு நபர் வந்தார். நான் அற்புதத்தைப் பார்க்க விரும்புகின்றேன். நீங்கள் இந்த அற்புதத்தை காட்டி விட்டால் நான் உங்கள் மீது ஈமான் கொள்வதற்கு தயாராக

இருக்கின்றேன் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். எனக்கு நினைவில் இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ் வேடிக்கையான விஷயங்களைக் காட்டுவதற்கு பாம்பாட்டி ஒன்றும் அல்ல. மாறாக, அவனது ஒவ்வொரு பணியும் ஞானத்தால் நிறைந்திருக்கின்றது என்று பதில் கூறினார்கள். மேலும் கூறினார்கள். உங்களுக்கு புதிய அற்புதத்தை காட்டுவதற்கு முன்னதாக எந்த அற்புதங்கள் இதற்கு முன்னர் உங்களுக்கு காட்டப்பட்டிருக்கின்றதோ அதிலிருந்தும் நீங்கள் என்ன பயனை அடைந்தீர்கள் ? ஆனால் மனித இயல்பிலுள்ள பலவீனமானது அதை விரும்பாமல் இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் ஒருவேளை அதனை நாகரீகமற்ற செயலாக அது தீர்மானிக்கின்றது. சோம்பேறித் தனத்திலும் கவனமற்ற நிலையிலும் மூழ்கியிருப்பதை அது ஆகுமானதாக கருதுகின்றது. இன்னும் சொல்வதென்றால், சோம்பேறித்தனத்திலும் கவனமற்ற தன்மையிலுமே எப்போதும் அது இருக்க வேண்டும். அது தனது பொறுப்பை எந்த அளவு நிறைவேற்றி உள்ளது என்று கூட யாரும் அதனிடம் கேள்வி கேட்கக்கூடாது என்று அது கருதுகிறது. ஒரு வேடிக்கையை பார்க்க எப்போது விரும்பினாலும் அந்த சமயத்திலேயே அது கண்டிப்பாக காட்டப்பட வேண்டும் என்று அது கருதுகின்றது. இது மனிதனின் இயல்பாகும்.

பிடிவாதமுள்ள மனிதனிடத்தில் இந்த பழக்கம் எப்போதும் இருந்து வருகின்றது. அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் ஷய்த்தானின் அடிச்சுவட்டை பின்பற்றி செல்கின்றனர். எல்லா நபிமார்களிடமும் இதே கேள்விகள் தான் கேட்கப்பட்டன. எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அவர்களிடம் கூட இத்தகைய கோரிக்கைகளைத் தான் வைத்தனர். அதாவது தங்கத்தாலான ஒரு வீட்டை அடையாளமாக காட்டுங்கள். விண்ணில் ஏறிச் செல்கின்ற அடையாளத்தை காட்டுங்கள். பிறகு இது மட்டுமல்ல. எங்கள் கண்களுக்கு முன்னால் வானத்திலிருந்து ஒரு நூலையும் கொண்டு வர வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கூறி இதுபோன்ற வீணான விஷயங்களையும் ஆட்சேபனைகளையும் அவர்கள் கூறி வந்தனர். அல்லாஹ் இதுபோன்ற வீணான கோரிக்கைகளுக்கு எந்த முக்கியத்துவத்தையும் தர மாட்டான். அவ்வாறே நபிமார்களும் அதற்கு முக்கியத்துவம் தர மாட்டார்கள். எண்ணற்ற அடையாளங்கள் இருக்கின்றன. ஏற்றுக் கொள்வதாக இருந்தால் நல்ல இயல்பை உடையவருக்கு அதுவே போதுமானதாகும்.

இது என்ன புதிய திட்டத்தை ஆரம்பித்து விட்டீர்கள் என்று சில மக்கள் தஹ்ரீகே ஜதீது தொடர்பாக ஆட்சேபனை செய்தனர். இதற்கு பதில் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

உண்மையில் எனது இந்த திட்டம் புதிய திட்டமல்ல. மாறாக, இது பழைய திட்டமாகும். ஜதீது அதாவது புதிய என்ற சொல் புதியதைத் தவிர வேறு எதையும் ஏற்றுக் கொள்ளவதற்கு தயாராக இல்லாத நோயாளிகளின் மூளையை கருத்தில் கொண்டு கூறப்பட்டதாகும். இது எவ்வாறு இருக்கிறது என்றால் மருத்துவர் ஒரு நோயாளிக்கு நீண்ட காலமாக சிகிச்சை செய்து வந்தார். அப்போது நோயாளி சில சமயங்களில் எனக்கு இந்த மருந்துகளால் எந்த பலனும் ஏற்படவில்லை என்று கூறினார். அப்போது மருத்துவர், நல்லது. நான் உனக்கு புதிய மருந்து ஒன்றை தருகின்றேன் என்று கூறிவிட்டு முதலில் கொடுத்த அதே மருந்துடன் இன்னும் சிலவற்றை கலந்து கொடுக்கின்றார். உதாரணமாக, அந்த காலத்தில் அவர்கள் இந்த உதாரணத்தை கூறியுள்ளார்கள். அதாவது டிங்க்சர் கார்டிங்கமை கலந்து அந்த மருந்தை நறுமணம்மிக்கதாக அவர் ஆக்கிவிடுவார். நோயாளி இந்த புதிய மருந்து எனக்கு கிடைத்திருக்கின்றது என்று கருதுகின்றார். டாக்டரும் கூட அதைப் புதிய மருந்து என்று உண்மையையே கூறியுள்ளார். ஏனென்றால், ஏற்கனவே தந்த மருந்துடன் அவர் ஒரு புதிய மருந்தை கலந்திருக்கின்றார். ஆனால் நோயாளி அதை குடிக்க வேண்டும் என்பதற்காகவும் அவருடைய நம்பிக்கை உடைந்து விடக்கூடாது என்பதற்காகவும் அதனை புதிது என்று அவர் கூறுகின்றார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒருமுறை ஒரு மூதாட்டி வந்தார். அவருக்கு மலேரியா காய்ச்சல் இருந்தது. அது நீண்ட காலம் இருந்தது. காய்ச்சல் இறங்கவே இல்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த மூதாட்டியிடம் நீங்கள் கோனீன் சாப்பிடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அம்மூதாட்டி கோனீனா ? கோனீன் மாத்திரையின் நான்கில் ஒரு பகுதியை நான் சாப்பிட்டால் கூட ஒவ்வொரு வாரமும் காய்ச்சல் அதிகமாவதன் காரணமாக நான் ஊதிக் கொண்டிருக்கும் நிலை ஏற்படுகின்றது என்று கூறினார். அந்த மூதாட்டி கோனீன் சாப்பிடுவதற்கு தயாராக இல்லை என்பதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் புரிந்து கொண்டார்கள். பொதுவாக நமது நாட்டில் கோனீனை கோ நைன் என்று கூறுவர். அதற்கு ஈருலகம் என்று பொருள். எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த மூதாட்டி சாப்பிடுவதற்காக கோனீன் என்ற மாத்திரையை தந்தார்கள். ஆனால், இது ஈருலகிலும் பயன்படும் மருந்தாகும். இதை பயன்படுத்துங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது கோனீன் அல்ல என்று கூறவில்லை. மாறாக, அதற்கு புதிய பெயரை வைத்தார்கள். இவ்வாறு புதிய பெயரை வைத்து மருந்தை கொடுத்ததும் அந்த மூதாட்டி அதிலிருந்தும் மூன்று வில்லைகளை சாப்பிட்டதும் எனக்கு இந்த மருந்தால் குளிர்ச்சி ஏற்பட்டு விட்டது. இன்னும் கொஞ்சம் அதிக மாத்திரைகளை தாருங்கள் என்று கூற ஆரம்பித்தார்கள். முதலில் அவர் மருந்தின் நான்கில் ஒரு பகுதியை சாப்பிட்டால் கூட காய்ச்சல் இறங்கவில்லை. சூடு அதிகமாகி விடுகிறது என்றெல்லாம் கூறினார். ஆனால் மருந்தின் பெயர் மாற்றப்பட்டதும் அவருக்கு அந்த மருந்தின் மூலம் குளிர்ச்சி ஏற்பட்டு விட்டது.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். நானும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் போன்றே பழைய திட்டத்திற்கு புதிய திட்டம் (தஹ்ரீகே ஜதீது) என்று பெயர் வைத்துள்ளேன். நீங்களும் இதனைப் புதிய திட்டம் என்றே கூற ஆரம்பித்து விட்டீர்கள். எந்த மக்களிடம் கலப்பற்ற மனத்தூய்மை இருக்கின்றதோ எவர்கள் ஆன்மீகத்தில் முன்னேற வேண்டும் என்று விரும்புகின்றனரோ அவர்கள் ஒரு திட்டத்தின் புதிய பெயரை கேட்டதும் இதுவொரு புதிய பொருளாகும். நாம் இதிலிருந்த பயனடைவோம் என்று கூறினர். ஆனால் எந்த மக்களிடம் நயவஞ்சம் இருந்ததோ அவர்கள் இதனை ஒரு புதிய பொருளாக கருதியவாறு இப்போது இவர் புதிய புதிய விஷயங்களை உருவாக்குகின்றார். முஹம்மது (ஸல்) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய வழிமுறைகளிலிருந்தும் இவர் முகம் திருப்பி சென்று விட்டார் என்று கூற ஆரம்பித்து விட்டனர். அவர் இந்த விஷயத்தை புரிவதற்கும் முயற்சி செய்யவில்லை. அதிலிருந்து பயனடையவும் இல்லை. ஆதம் தோன்றிய நாளிலிருந்து இன்று வரை எப்போதும் இருந்து வரும் ஒரு சட்டமாக இது இருக்கின்றது. அதாவது ஷய்த்தான் உங்கள் மீது தாக்குதல் நடத்தும் போது அவனிடமிருந்து தப்பிப்பதற்கான வழிகளை நீங்கள் உருவாக்க வேண்டும். ஷய்த்தானிடமிருந்து தப்பிப்பதற்கும் மார்க்க பணிகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கும் எந்தவொரு திட்டத்தை தீட்டினாலும் அது நபிமார்கள் எதற்காக வந்தார்களோ, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதற்காக வந்தார்களோ, இந்த காலத்தில் அன்னாரது உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எதற்காக வந்தார்களோ அந்த நோக்கத்தை பெருவதற்காகத் தான் அது இருக்கின்றது. எந்தவொரு நோக்கத்தை பெறுவதாக இருந்தாலும் அவ்வாறே ஜமாஅத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் பொறுப்பிலுள்ள நபர்கள் அதன் பின்னால் தொடர்ந்து சென்று அதற்காக முயற்சி செய்ய வேண்டியது அவசியமானதாகும். அது தர்பிய்யத் பணியாக இருந்தாலும் சரி. வேறு எந்த பணியாக இருந்தாலும் சரி.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஒரு ஏழை இருந்தார். பெரும்பாலும் இதற்கு முன்னர் முஹாஸிப் அலுவலகம் இருந்த இடத்திற்கு எதிரே உள்ள அறையில் அவர் அமர்ந்து வந்தார். அஹ்மதிய்யா சோக்கிலிருந்து எந்தவொரு மனிதர் வருவது தெரிந்தாலும் ஒரு ரூபாய் தாருங்கள் என்று அவர் கூறுவார். வந்து கொண்டிருப்பவர் சிறிது முன்னால் வந்ததும் 50 பைசாவாவது தாருங்கள் என்பார். இன்னும் சிறிது முன்னால் வந்ததும் 4 அனா இருந்தால் போதும் என்பார். இன்னும் சிறிது முன்னால் வந்ததும் 2 அனா தந்தால் போதும் என்பார். அவருக்கு பக்கத்தில் வந்து முன்னால் நின்றால் 1 அனா இருந்தால் தாருங்கள் என்பார். இன்னும் அருகில் சென்று விட்டால் ஒரு பைசாவாவது தாருங்கள் என்பார். இன்னும் அருகில் சென்று விட்டால் ஏதாவது தாருங்கள் என்பார். வருபவர் மஸ்ஜிது அக்ஸாவிற்கு திரும்புகின்ற அந்த திருப்பத்தை அடைந்ததும் பக்கோடாவாவது தாருங்கள் என்பார். இறுதியில் வருபவர் அவரை ஒன்றிவிட்டதை பார்த்ததும் மிலகாய் இருந்தால் தாருங்கள் என்பார். ஆக, அவர் இரண்டு ரூபாயிலிருந்து ஆரம்பித்தார். மிலகாய் வரை வந்து முடித்து விட்டார். இவ்வாறே பணி செய்பவர்களும் இதனை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது தனது பணியின் விளைவாக ஏதாவது கையில் கிடைக்க வேண்டும். முதல் தடவை 100 பேர்களில் ஒருவர் பக்கம் அவர் கவனம் செலுத்தினால் அடுத்த தடவை அந்த எண்ணிக்கை இரண்டாகி விடும். அதற்கு அடுத்த முறை அது நான்காகி விடும். இவ்வாறு மெதுமெதுவாக அது அதிகரித்துக் கொண்டே இருக்கும். எனவே பணி செய்யுங்கள். அத்துடன் அதன் விளைவையும் பாருங்கள். உலகப் பணி விளைவை ஏற்படுத்தாமல் இருப்பதில்லை. அவ்வாறு இருக்கும் போது நல்லொழுக்க மற்றும் ஆன்மீக பணிகள் விளைவை ஏற்படுத்தாமல் எப்படி இருக்க முடியும். ஆனால் எவருடைய உள்ளம் சரியாக இருப்பதில்லையோ அவர்கள் நாங்கள் வேலை செய்யத்தான் செய்கின்றோம். ஆனால் விளைவு அல்லாஹ்வின் கைகளில் இருக்கின்றது என்று கூறி விடுகின்றனர். விளைவு அல்லாஹ்வின் கைகளில் இருக்கின்றது என்று அவர்கள் கூறுவதன் பொருள் நாங்கள் எங்கள் தரப்பிலிருந்து முழுமையாக முயற்சி செய்தோம். ஆனால் அல்லாஹ் எங்களிடம் பழி தீர்த்துக் கொண்டான் என்பதாகும்.

இவ்வாறு கூறுவது எந்த அளவு முட்டாள்தனமான விஷயமாக இருக்கின்றது. அதாவது தனது பலவீனங்களையும், குறைகளையும் அல்லாஹ்விடம் தொடர்புபடுத்தி கூறுகின்றனர். நாம் செய்கின்ற பணிகளுக்கு ஏதாவதொரு விளைவை ஏற்படுத்துவது அல்லாஹ்வின் சட்டமாக இருக்கின்றது. ஆனால் நல்ல அல்லது தீய விளைவின் அடித்தளம் நாம் செய்யும் நமது பணிகளில் தான் இருக்கின்றது. ஒரு நபர், பத்தில் ஒரு பங்கிற்காக உழைத்துள்ளார் என்றால் இயற்கை சட்டம் பத்தில் ஒன்றிற்கான விளைவையே அவருக்கு வழங்கும். இப்போது பத்தில் ஒரு பங்கு கிடைத்திருக்கிறது என்பதன் பொருள் அல்லாஹ்வின் இயற்கை சட்டத்தின் காரணமாக பத்தில் ஒன்றிற்கான விளைவு ஏற்பட்டு இருக்கிறது என்பதல்ல. அதுவன்றி அவர் அதிகமாக உழைத்திருக்கின்றார் என்றும் கூற முடியாது. இயற்கை சட்டமானது எவருடைய உழைப்பையும் வீணாக்கி விடாது. ஆனால் மனதின் தீங்கானது நான் எனது கடமையை நிறைவேற்றி விட்டேன். ஆனால் அல்லாஹ் எந்த கடமையை நிறைவேற்ற வேண்டுமோ அதை

நிறைவேற்றவில்லை. அவன் அதை மறந்து விட்டான் என்று கூறுகிறது. இதை விட பெரிய குஃப்ர் வேறு என்ன இருக்க முடியும்? எனவே, உழைப்பு மற்றும் முயற்சியை பொருத்தவரை அவற்றின் விளைவுகள் நமது கைகளில் தான் இருக்கின்றன. நல்ல விளைவு வெளிப்படவில்லை என்றால் நமது பணிகளில் ஏதோ தவறு இருக்கின்றது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பணியின் விளைவுகளும் குறிப்பிட்ட ஒரு வடிவத்தில் நமக்கு முன்னால் வர வேண்டும் என்பதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த விளைவுகள் நம் முன்னால் வராத வரை நாம் அமைதியாக அமர்ந்து விடக்கூடாது. (அன்வாருல் உலூம் தொகுதி 18, பக்கம் 201-202)

சில மக்கள் இவ்வாறு எழுதுகின்றனர். நாங்கள் அதிகமாக இறைவணக்கம் செய்தோம். துஆக்கள் செய்தோம் ஆனால் எங்களது நோக்கத்தை நாங்கள் அடைய முடியவில்லை. எங்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று அவர்கள் எழுதுகின்றனர். அவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று அவர்கள் எந்த அளவு செல்ல வேண்டுமோ அங்கு வரை செல்லவில்லை. அல்லது அவர்கள் சென்று சேர வேண்டிய இலக்கை நிர்ணயித்திருந்தனர். ஆனால் தவறான வழியில் சென்று விட்டனர். எனவே துஆ செய்யக்கூடிய ஒருவர் தனது வழியும் சரியாக இருக்கின்றதா? இலக்கை அடைவதற்கு எந்த அளவு முயற்சி செய்ய வேண்மோ அதை நான் செய்துள்ளேனா? என்று சிந்திப்பது அவசியமானதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். இரசாயனப் பொருட்களை உருவாக்கும் ஒரு ரசவாதி தனது முயற்சியில் தோல்வி அடையும் போது ஒரு வெப்ப நிலையின் அளவில் சிறு குறைவு ஏற்பட்டதைக் காரணமாகக் கூறுகின்றார். இரசாயனப் பொருட்கள் உருவாகுவதில் அவர் அவநம்பிக்கை அடைவதில்லை. மாறாக, தனது முயற்சியிலுள்ள குறை தான் அதற்கு காரணம் என்று அவர் கூறுகின்றார். ஆனால் இரசாயனப் பொருட்கள் தயாராகி விடும் என்று நாம் எந்த எதிர்பார்ப்பையும் வைக்க முடியாது. இறைவனோடுள்ள தொடர்பை வளர்த்துக் கொள்வதற்கும் மற்றும் அவனை நெருங்கிச் செல்வதற்கும் முழுமையாக நாம் நம்பிக்கை வைக்கலாம். ஆனால் இரசாயனப் பொருட்களை தயார் செய்பவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வெப்பத்தின் அந்த குறைவுடனேயே கழிந்து விடுகின்றது. அவர் ஒவ்வொரு முறையும் தோல்வி கண்ட பிறகும் அவநம்பிக்கை அடைவதேயில்லை. ஆனால் எந்த நபர் இறைவனை நெருங்க விரும்புகின்றாரோ அவர் வெற்றி பெறாமல் இருந்தால் அவர் அதனை தனது செயல் முறையிலுள்ள குறையாக கருதுவதில்லை. மாறாக, இறைவனிடம் உடனடியாக அவர் அவநம்பிக்கை அடைந்து விடுகின்றார். தனது எல்லா முயற்சிகளையும் கைவிட்டு விடுகின்றார். இரசாயனப் பொருட்களை தயார் செய்கின்றவர் தவறை தன்னோடு தொடர்புபடுத்து கூறுகின்றார். தங்கத்தை தயார் செய்வதற்கான தனது கருத்தை அவர் உறுதியாக நம்புகின்றார். ஆனால் இறைவனைப் பெறுதற்காக முயற்சி செய்பவர்கள் தமது தவறை இறைவனோடு தொடர்புபடுத்தி கூறுகின்றார். அந்த இறைவனை அவர் கைவிட்டும் விடுகின்றார். (குத்பாத்தே மஹ்முது தொகுதி 11, பக்கம் 60)

இன்றைய நாட்களில் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் நிலையும் இவ்வாறே இருக்கின்றது. ஒரு விஷயத்தை ஆராய்ச்சி செய்வதற்கு பல வருடங்கள் வரை அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். பல வருடங்கள் கழிந்த பிறகு தான் அவர்களுக்கு எப்போதாவது வெற்றி கிடைக்கின்றது. எந்த வழிமுறையை அவர்கள் ஒருமுறை பின்பற்றினார்களோ அதையே எப்போதும் பின்பற்ற வேண்டும் என்ற அவசியமும் இல்லை. பல்வேறு அனுபவங்களின் அடிப்படையில் பல்வேறு வழிமுறைகள் மாறிக் கொண்டே இருக்கின்றன. எனவே ஆன்மீகத்தைப் பெறுவதற்கும் இறை நெருக்கத்தைப் பெறுவதற்கும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் கூட அதற்காக நீங்கள் மேற்கொள்ளும் வழிமுறையைப் பார்ப்பது அவசியமாகும். உங்களை சீர்திருத்திக் கொள்வது அவசியமாகும். இது பற்றி ஆய்வு செய்ய வேண்டியது அவசியமானதாகும். எவ்வாறு நீங்கள் சீர்திருத்தத்தை மேற்கொள்கின்றீர்கள் என்பதை பற்றி உங்களது உள்ளத்தை அலசிப் பார்ப்பது அவசியமானதாகும். உங்களது இறை வணக்கங்களின் பக்கம் பார்ப்பது அவசியமானதாகும். அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் செயல்படுத்துவது அவசியமானதாகும். உங்களது எல்லா செயலின் பக்கமும் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. நமது செயல்கள் எந்த வகையை சார்ந்தவையாக இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். நமது சிந்தனைகளையும் அறிவையும் சரி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. நான் எனது அடியார்களுக்கு அருகில் இருக்கின்றேன். அவர்கள் செய்யும் துஆக்களை கேட்கின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். அவ்வாறிருக்க, அவன் நமக்கு அருகில் வரவில்லை என்றால் நாம் செய்யும் துஆக்கள் அவனால் கேட்கப்படவில்லை என்றால் எங்கோ, ஏதோவொரு இடத்தில் நமது முயற்சிகள் குறைவாக இருக்கின்றது என்றே அதற்குப் பொருள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். இரு வகையான பிச்சைக்காரர்கள் இருக்கின்றனர். முதல் வகை பிச்சைக்காரர்கள் ஒருவரது கதவுக்கு அருகில் சென்று ஏதாவது தாருங்கள் என்று குரல் கொடுக்கின்றார். யாராவது எதையாவது தந்தால் அதை பெற்றுக் கொள்வார். எதுவும் தரவில்லை என்றால் 2 அல்லது 3 முறை குரல் கொடுத்து விட்டு தொடர்ந்து வேறு இடத்திற்கு சென்று விடுவார். இரண்டாவது வகை பிச்சைக்காரர் எப்படிப்பட்டவர் என்றால் எதுவும் கிடைக்காமல் அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து எங்குமே அவர்கள் செல்ல மாட்டார்கள். இவ்வகையைச் சார்ந்த பிச்சைக்காரர்கள் எதையும் பெறாமல் எவரையும் விடுவதில்லை. இத்தகைய பிச்சைக்காரர்கள் மிகக் குறைவானவர்களே இருக்கின்றனர். எனக்கு நினைவில் இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருகில் கூட ஒரு நபர் வந்து அமர்வார். ஏதாவது அவருக்கு கிடைக்காத வரை அவர் அந்த இடத்தை விட்டு எழுவதில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வெளியில் வந்து அவருக்கு ஏதாவது வழங்காத வரை அவர் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டிருப்பார். பிறகு சில நேரங்களில் இவ்வளவு தர வேண்டும் என்று அவர் தொகையை நிர்ணயம் செய்து விடுவார். ஹஸ்ரத் சாஹிப் அதை விட குறைவாக கொடுத்தால் அதை ஒருபோதும் அவர் வாங்க மாட்டார். பல முறை இவ்வாறு நிகழ்ந்துள்ளது. அதாவது விருந்தினர்கள் அவர் நிர்ணயித்த தொகையை அவருக்கு முழுமையாக கொடுத்து விடுகின்றனர். அதற்கு பிறகு அவர் சென்று விடுவார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பார்த்துள்ளேன். அவருடைய வாயிலிருந்து இவ்வளவு தொகை தர வேண்டும் என்ற வார்த்தைகள் வந்து விட்டால் அதை அவர் பெற்றே தீருவார். அந்த தொகை முழுமையாக கிடைக்காமல் அவர் அங்கிருந்து போகவே மாட்டார். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவர்கள் ஆரோக்கியம் பெற்று வெளியில் வருகின்ற வரை தான் இருந்த இடத்தை விட்டு அவர் போகவே மாட்டார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இந்த இரண்டாவது வகை பிச்சைக்காரர் போன்று செயல்பட வேண்டும் என்று கூறினார்கள். அதாவது அவனிடம் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இறைவன் முன்னிலையில் ஒரேடியாக அமர்ந்து விட வேண்டும். எதுவரை இறைவனுடைய செயல் இப்போது இது தொடர்பாக துஆ செய்யக்கூடாது என்பதை நிரூபிக்காதோ அதுவரை அந்த இடத்தை விட்டு விலகக் கூடாது. (குத்பாத்தே மஹ்முது தொகுதி 10, பக்கம் 200) இறைவனது செயல் இப்போது அது தொடர்பாக துஆ செய்யக்கூடாது என்பது பல வகைப்படும்.

உதாரணமாக, ஒரு பெண் கர்ப்பவதியாக இருக்கின்றாள். இன்றைய விஞ்ஞானத்தின் மூலம் ஆண் குழந்தை பிறக்குமா? பெண் குழந்தை பிறக்குமா? என்பது தெரிந்து விடுகின்றது. அதாவது இறுதி நேரத்தில் எது நடக்கப் போகிறது என்பது முற்றிலும் தெளிவாக தெரிந்து விடுகின்றது. அப்போது ஆண் குழந்தை தான் இப்போது பிறக்க வேண்டும் என்று கூறுவது இறைவனது செயலுக்கு எதிரானதாகும். ஏனென்றால் அது பிறப்பு நிகழ்வதற்கு முன்னுள்ள கடைசி நேரமாகும். ஆனால் அடுத்த பிரசவத்திற்காக இவ்வாறு துஆ செய்வது ஏற்றுக் கொள்ளப்படலாம். அதாவது அடுத்த பிரசவத்தில் அல்லாஹ் அவருக்கு ஆண் குழந்தையை வழங்கி விடலாம். அல்லது எப்போதாவது இறைவனது நாட்டம் தெளிவாக திறந்து காட்டப்பட்ட பிறகும் அதற்கு எதிராக மனிதன் துஆ செய்து கொண்டிருந்தால் பிறகு இதுவும் தவறாகும். இது அவமரியாதையான செயலாகி விடும். ஆனால் இதையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ஒருபோதும் திட்டமிடுவதை விட்டுவிடக் கூடாது. துஆ செய்வதுடன் திட்டமிடுதலும் அவசியமானதாகும். நிரந்தர மனப்பாங்குடன் திட்டமிடுதலையும் துஆ செய்வதையும் கடைபிடிக்க வேண்டும். அவை அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்கின்றன. துஆ செய்வதுடன் திட்டமிடுவது மிகவும் அவசியமானதாகும். துஆவுடன் திட்டமிடாமல் இருப்பது முற்றிலும் தவறான விஷயமாகும். அத்தகைய நபரது துஆ அவரது முகத்தில் எறியப்படுகிறது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறி வந்தார்கள்.

மேலும் கூறினார்கள். எவர் துஆ மட்டும் செய்து திட்டமிடாமல் இருக்கின்றாரோ அவரது துஆ கேட்கப்படாது. ஏனென்றால் துஆவுடன் திட்டமிடாமல் இருப்பது இறைவனின் சட்டத்தை முறிப்பதாகும். மேலும் இறைவனை சோதிப்பதாகும். இறைவனின் அடியார்கள் அவனை சோதிப்பது என்பது இறைவனின் மகிமைக்கு மாற்றமான விஷயமாகும். அல்லாஹ் நமக்கு நிரந்தர மனப்பாங்குடன் நமது நிலைமைகளை அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப அமைத்துக் கொண்டு வெளிப்படையான எல்லா அம்சங்களையும் கடைபிடித்தவாறு துஆக்கள் செய்வதற்கான நற்பாக்கியத்தையும் வழங்குவானாக.

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அது ஒரு ஷஹீதுடைய ஜனாஸாவாகும். இந்த ஷஹீது ஷேகுபூரா மாவட்டத்தைச் சார்ந்த கோட் அப்துல் மாலிக் என்ற இடத்தில் வசித்து வந்த மதிப்பிற்குரிய முஹம்மது அலி சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய கமருஸ் ஜஹா சாஹிப் ஆவார்கள். இவர்களை எதிரிகள் 1 மார்ச் 2016 அன்று மதியம் ஏறக்குறைய 1.30 மணிக்கு அவரது வீட்டிற்கு வெளியில் வைத்து கத்திகளால் தாக்குதல் நடத்தி ஷஹீதாக்கி உள்ளனர். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

சம்பவம் நடந்த அன்று ஷஹீது மர்ஹூம் கமருஸ் ஸியா சாஹிப் அவர்கள் அவரது வீட்டை ஒட்டியுள்ள தனது கடையை அடைத்து விட்டுத் தமது குழந்தைகளை பள்ளிக் கூடத்திலிருந்து அழைத்து வருவதற்காக வீட்டை விட்டு வெளியேறியதும் அடையாளம் தெரியாத சிலர் அவர் மீது தாக்குதல் நடத்தினர். அவரை தெருவில் இழுத்துக் கொண்டு சென்றனர். அவர்களில் ஒரு நபர் கமருஸ் ஸியா சாஹிப் அவர்களை அழுத்தி பிடித்துக் கொண்டார். மற்றவர் அவர் மீது கத்திகளைக் கொண்டு தாக்குதல் நடத்த ஆரம்பித்தார். மதிப்பிற்குரிய கமருஸ் ஸியா சாஹிப் அவர்கள் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்தார். ஆனால் அவரது நெஞ்சிலும், தோள்களிலும், இதயத்திலும், கழுத்திலும் கத்திக் குத்தின் காரணமாக காயங்கள் ஏற்பட்டன. தாக்குதல் நடத்திய ஒருவர் அவர்களது கழுத்திற்குப் பின்னால் கத்தியால் குத்தினார். கத்தி உடலுக்குள் குத்தப்பட்டதும்

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001

The Weekly BADAR Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Vol. 1 | Thursday 7 APRIL 2016 | Issue No. 5

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

சந்தர்ப்பம் பார்த்து அவர் அங்கிருந்து ஓடிவிட்டார். காயமடைந்ததை தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் அந்த சந்தர்ப்பத்திலேயே அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

ஷஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அவர்களின் கொள்ளுத் தாத்தாவான மதிப்பிற்குரிய தவ்லத் கான் சாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் அறிமுகமானது. இவர்கள் குர்தாஸ்பூர் மாவட்டத்திலுள்ள அவ்லக் பேரியிலிருந்து காதியான் சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தார்கள். இவர்கள் மரணமடைந்த பிறகு ரப்வாவிலுள்ள பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். ஷஹீது மர்ஹூமின் தாத்தாவான மதிப்பிற்குரிய ஃபத்ஹ் முஹம்மது சாஹிப் அவர்களும் அல்லாஹ்வின் அருளால் பிறப்பு அஹ்மதி ஆவார்கள். அவர்களும் ரப்வாவிலுள்ள பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். பாகிஸ்தான் நிறுவப்பட்ட பிறகு இந்த குடும்பம் சியால்கோட் மாவட்டத்திலுள்ள காலேகே நாக்ரே என்ற இடத்திற்கு இடம் பெயர்ந்து வந்து குடியேறினர். ஷஹீது மர்ஹூம் அங்கு தான் பிறந்தார்கள். பிறகு இவர்கள் 1985 ல் கோட் அப்துல் மாலிக்கிற்கு வந்து விட்டார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்கள் B.Com வரை கல்வி கற்றுள்ளார்கள். சில காலம் வரை பல்வேறு துறைகளில் வேலை செய்த பிறகு தனது வீட்டிற்கு அருகில் வியாபாரத்திற்காக ஒரு கடையை திறந்தார்கள். போட்டோ ஸ்டேட் மற்றும் மொபைல் கடை வைத்திருந்தார்கள். 2004 ல் இவர்களது திருமணம் நடைபெற்றது. எண்ணற்ற சிறப்பம்சங்களை உடையவர்களாக இவர்கள் இருந்தார்கள். நேர்மையான மனிதராகவும், நல்லுள்ளம் படைத்தவராகவும், நற்பண்புகளை உடையவராகவும், எல்லோரிடமும் இனிமையாக பழகுபவராகவும் அவர்கள் இருந்தார்கள். அர்ப்பணிப்பு மனப்பாங்கு உள்ளவராகவும், தைரியமுள்ள இளைஞராகவும் அவர்கள் இருந்தார்கள். தலைமையகத்திலிருந்து வரும் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதில் முன்னனியில் இருந்து வந்தார்கள். ஜமாஅத் தொண்டுகளை செய்வதிலும் எப்போதும் சிறந்து விளங்கினார்கள். எல்லாரிடமும் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள்.

இவர்களது சகோதரரான மஸ்கர் அலி சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். பொதுவாக தொழுகைகளை நிறைவேற்றவும் குறிப்பாக ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவதற்கும் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்கள் முறையாக ஜுமுஆ தொழுவதைப் பார்த்து ஏனைய அஹ்மதி அல்லாத கடைக்காரர்களும் கூட தங்களது கடைகளை அடைத்து விட்டு ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவதற்காக சென்றனர். இந்த மிர்ஸாயி ஜுமுஆ சமயத்தில் கடையை அடைத்து விட்டு செல்கின்றார் என்றால் நாமும் அவ்வாறு செல்ல வேண்டும் என்று அவர்கள் கூறி வந்தனர். இதன் காரணமாக ஷஹீது மர்ஹூம் அவர்கள் எந்த ஜுமுஆ தொழுகையையும் விட்டதில்லை. அதாவது என் காரணமாகத்தான் அஹ்மதி அல்லாத மக்களும் ஜுமுஆவிற்கு செல்கின்றார்கள். எனவே நானும் ஜுமுஆவை விடக்கூடாது என்று அவர்கள் கருதி வந்தார்கள்.

ஷஹீது மர்ஹூமின் மனைவி இவ்வாறு கூறுகின்றார்கள். கடந்த மாதத்திலிருந்து ஷஹீது மர்ஹூம் அவர்கள் என்னிடம் நடந்து கொண்ட விதத்தில் பெரிய மாற்றம் தெரிந்தது. முன்பை விட அதிகமாக என்னை அவர் கவனித்து வந்தார். கடுமையாக ஏதாவது பேசினாலும் கூட அவர் அதை தீயதாக கருதியதில்லை.

ஷஹீது மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர் ஆவார். இப்போது இஸ்லாஹ் வ இர்ஷாத் செயலராக தொண்டு செய்யும் நல்வாய்ப்பை பெற்று வந்தார். இதைத் தவிரவும் பல்வேறு தொண்டுகளை அவர் செய்து வந்தார். இதற்கு முன்னரும் பல்வேறு ஜமாஅத் பொறுப்புகளிலிருந்து தொண்டாற்றும் நற்பேற்றை இவர் பெற்றுள்ளார். எல்லா ஜமாஅத் பணிகளிலும் அதிகமாக ஈடுபட்டு வந்தார். ஷஹீது மர்ஹூமிற்கு ஜமாஅத் ரீதியாக எதிர்ப்பும் இருந்து வந்தது. இது தொடர்பாக போலீஸிற்கும் எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

14 ஆகஸ்ட் 2014 அன்று ஏறக்குறைய 500 பேர்களை கொண்ட ஒரு ஊர்வலம் போலீஸின் கண்காணிப்புடன் கமருஸ் ஸியா சாஹிப் அவர்களது வீட்டிற்கு வெளியே ஒன்று திரண்டது. எதிரிகளின் வற்புறுத்தலின் காரணமாக ஒரு போலீஸ்காரர் கடையின் கவுண்டர் மீது ஏறி அங்குள்ள படங்களை இறக்க ஆரம்பித்தார். கடையின் முகப்பில் எழுதப்பட்டிருந்த வல்லாஹு கைருர் ராஸிகீன் மற்றும் கலிமா தய்யிபா ஆகியவற்றை கருப்பு பெயின்ட் அடித்து அழித்து விட்டார். அதற்குப் பிறகு வீட்டின் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த அலைஸல்லாஹு பிகஃபின் அப்தஹூ மற்றும் மாஷா அல்லாஹ் போன்ற எழுத்துக்களை அங்கிருந்து அகற்றி சுத்தியல் வைத்து அதனை உடைத்து விட்டனர். இறுதியில் வீட்டிற்கு வெளியே வைக்கப்பட்டிருந்த ஒரு பலகையையும் சுத்தியலால் உடைத்து விட்டனர். அதில் கமருஸ் ஜியா சாஹிப் அவர்களது தந்தை பெயரான முஹம்மது அலி என்று எழுதப்பட்டிருந்தது. ஆக இதுவே இந்த மக்களின் நிலையாகும். இன்னாலில்லாஹ் என்று ஓதுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்.

இவ்வாறு 26 ஜனவரி 2014 ல் 40 லிருந்து 50 என்ற எண்ணிக்கையில் மவ்லவிமார்களின் ஒரு ஊர்வலம் கமருஸ் ஜியா சாஹிப் அவர்களை வலுக்கட்டாயமாக கடையிலிருந்து வெளியேற்றியது. அவர்கள் அவர் மீது கொடுமை இழைத்தனர். அதைத் தவிர ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது புகைப்படத்தையும் அவமரியாதை செய்தனர். தரக்குறைவான சொற்களை பயன்படுத்திக் கொண்டிருந்தனர். இந்த தருணத்தில் போலீஸும் சரியான நேரத்திற்கு அங்கு சென்று கமருஸ் ஜியா சாஹிப் அவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றது. ஆனால் அதற்குப் பிறகு எதிரிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் விவகாரத்தை முடித்து விட்டனர். ஆக, இத்தகைய எதிர்ப்பான சூழ்நிலை இருந்து வந்தது. நிரந்தரமாக அவர்களை எதிரிகள் மிரட்டியும் வந்தனர். இதன் காரணமாக ஒருவேளை நாம் வெளிநாடு சென்று விட வேண்டும் என அவர் நினைத்திருந்தார். ஆனால் அல்லாஹ் அவருக்கு ஷஹாதத்தின் அந்தஸ்த்தை வழங்கினான். அவரை தன்னிடம் அழைத்துக் கொண்டான்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் தனது நினைவாக தனக்குப் பின்னால் இரண்டு சகோதரர்களையும், இரண்டு சகோதரிகளையும் விட்டுச் சென்றுள்ளார். இவர்களைத் தவிர தந்தையாரான மதிப்பிற்குரிய முஹம்மது அலி சாஹிப் அவர்களையும் மனைவியான ரூபி கமர் சாஹிபா அவர்களையும், மூன்று குழந்தைகளான ஹுஸைஃபா அஹ்மது வயது 10, மகள் அம்மதுல் மத்துன் வயது 7, இன்னொரு மகளான அம்மதுல் ஹாதி வயது 4 ஆகியோரையும் விட்டு விட்டு சென்றுள்ளார்கள்.

அல்லாஹ் நமது இந்த ஷஹீது சகோதரரின் அந்தஸ்தை உயர்த்துவானாக! தனது திருப்தியின் சொர்க்கங்களில் எப்போதும் அவரை உயர்த்திக் கொண்டே செல்வானாக! சொர்க்கத்தின் அருள்களை அவருக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக! தனக்கு பிரியமானவர்களுக்கு அருகில் அவருக்கு இடமளிப்பானாக!

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)*

என்னை சூழ்ச்சி செய்பவனாகவும் இட்டுக்கட்டி பொய்கூறுபவனாகவும் கருதுகின்ற ஒவ்வொருவரும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாக நான் இருக்கின்றேன் என்ற எனது வாதத்தைப் பொய்ப்படுத்தக் கூடியவராக இருக்கின்ற ஒவ்வொருவரும் அவர் தன்னை முஸ்லிம் என்று கூறினாலும் சரி அல்லது இந்துவாகவோ ஆரியராகவோ இருந்தாலும் அவருக்கு எந்நிலையிலும் உரிமை இருக்கின்றது. அவர் தன் சார்பாக என்னை எதிர்த்து எழுத்து வடிவில் அறிக்கையை வெளியிடட்டும். அதாவது, இறைவன் முன்னிலையில் இந்த உறுதிமொழியை சில பத்திரிகைகளில் வெளியிட வேண்டும். அதாவது, நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். எனக்கு முழுமையான அகப்பார்வையின் மூலமாக இவ்விஷயம் தெரிய வந்துள்ளது. அதாவது, தானே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதம் செய்கின்ற இந்த நபர் (இந்த இடத்தில் தெளிவாக எனது பெயரை எழுதவும்) உண்மையில் பொய்யராக இருந்தால், அவருக்கு இறங்குகின்ற இல்ஹாம்களில் - அவற்றில் சிலவற்றை இந்த நூலிலும் அவர் எழுதியுள்ளார். அவை இறைவனின் வார்த்தைகள் அல்ல. மாறாக, அவை அனைத்துமே இவரால் இட்டுக்கட்டி பொய்யாகப் புனைந்து கூறப்பட்டவையாகும். எனது முழுமையான அகப்பார்வையின் மூலமாக முழுமையாக சிந்தித்துப் பார்த்த பிறகு முழுமையான நிச்சய உறுதியுடன் நான் இவரை இட்டுக்கட்டி பொய் கூறுபவராகவும் பொய்யராகவும் தஜ்ஜாலாகவும் கருதுகின்றேன். எனவே, வல்லமையுள்ள இறைவா! உனது பார்வையில் இந்த நபர் உண்மையாளராக இருந்தால் பொய்யராகவும், இட்டுக்கட்டி பொய் கூறுபவராகவும், கா.·.பிராகவும், மார்க்கமற்றவராகவும் இல்லாமல் இருந்தால் இந்த பொய்ப்படுத்துதல் மற்றும் இழிவுபடுத்துதலின் காரணமாக என் மீது ஏதாவதொரு தண்டனையை இறக்குவாயாக! இதற்கு மாற்றமாக இருந்தால் அவருக்கு தண்டனை வழங்குவாயாக என்று எழுதி இந்த உறுதிமொழியை வெளியிட வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு புத்தம்புது அடையாளத்தைக் கேட்டுப் பெறுவதற்காக இந்தக் கதவு திறந்திருக்கின்றது. நான் உறுதி கூறுகின்றேன். அதாவது, முபாஹலாவிற்கான இந்த துஆவை பிரசுரிக்க வேண்டும். குறைந்தபட்சம் மூன்று முக்கிய பத்திரிகைகளில் அது இடம் பெற்றிருக்க வேண்டும். இந்த முபாஹலாவிற்கான துஆவிற்குப் பிறகும்கூட தெளிவாக இறைவன் மீது சத்தியம் செய்து முபாஹலா செய்கின்ற அத்தகைய நபர் விண்ணிலிருந்து இறங்குகின்ற தண்டனையிலிருந்து பாதுகாப்பாக இருந்து விட்டால் பிறகு நான் இறைவன் புறமிருந்து வந்தவன் அல்லன். இந்த முபாஹலாவில் எந்தவொரு கால அளவும் நிர்ணயிக்கப்பட வேண்டிய தேவையில்லை. உள்ளம் உணரக்கூடிய ஏதாவதொரு விஷயம் இறங்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்கின்றது.

(ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 70-72)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad